விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 284 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 12 வெள்ளிக்கிழமை (29.09.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## உயிர் அச்சுறுத்தல்

## பதவியை துறந்தார்

# முல்லை நீதிபதி சரவணராஜா



### பாதுகாப்புக்காக நாட்டை விட்டு வெளியேறினார்

- குருந்தூர் விவகாரம் தொடர்பாக உயிர் அச்சுறுத்தல் விடுக்கப் பட்டதாக தெரிவிப்பு.
- குருந்தூர் வழக்கின் தீர்ப்பை மாற்றியமைக்கக் கோரி அரச தரப்பால் தொடர் அழுத்தம்.
- பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்டதோடு புலனாய்வாளர்கள் தொடர் கண்காணிப்பு.
- அச்சுறுத்தலால் நாட்டை விட்டு வெளியேறுவதாக தெரிவிப்பு.

(16ஆம் பக்கம் பார்க்க)

## துன்னாலையில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(கரணவாய்)

துன்னாலையில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் துன்னாலை வேம்படி பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சிவகுமார் 15

## உடுவிலில் காணாமல் போனவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

உடுவிலில் காணாமல் போன ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் உடுவில் மல்வம் பகுதியைச் 15

## வரலாற்றுப் பாடம் மூலம் இலங்கை மீண்டெழ வேண்டும்

### இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்



(கொழும்பு)

"இலங்கை அதன் வரலாற்றில் கற்றுக்கொண்ட பாடங்களின் ஊடாக மீண்டெழுவதற்கான சந்தர்ப்பமாக இந்த நெருக்கடியான தருணத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா இலங்கை வணிக சபையின் 31ஆவது பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் 15

### முல்லை நீதிபதி பதவி விலகல்

## நீதித்துறைக்கு விழுந்த சம்மட்டியடியாகும்

### சிறீதரன் எம்.பி கண்டனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிபதியின் பதவி விலகல், நீதித்துறைக்கு விழுந்த சம்மட்டியடி என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் 15



வல்லிபுர ஆழ்வாரின் இரதோற்சவம்

## தமிழர்களின் இருப்புக்காக 13ஐ அமுலாக்க வேண்டும்

### நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் இருப்புக்களை தக்கவைத்துக் கொள்வதற்காக 13ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். 15

## ரணில் அரசின் ஊழலாலேயே ஐ.எம்.எப் கடன் தொகை நிறுத்தம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

ரணில் அரசின் ஊழல் கொள்கையாலேயே சர்வதேச நாணய நிதியம் தனது இரண்டாவது கடன்தொகையைநிறுத்தியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் பஸ் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ணா 16

## வாகன இறக்குமதிக்கு தடை நீக்கப்படாது

### பதில் நிதி அமைச்சர் செஹான்

(கொழும்பு)

வாகனங்கள்மீதான இறக்குமதித் தடையை நீக்கும் எண்ணம் தற்போதைக்கு இல்லை என பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேலும் கருத்துத் தெரிவித்த 15

நடுவு நிலை தவறாது நீதி நோக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை நீதிபதி பதவி விலகல்
## அரசின் கோரமுகம் வெளிப்பட்டுள்ளது
## ரவிகரன் கண்டனம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகலில் இலங்கை அரசாங்கத்தின் கோரமுகம் வெளிப்படுகின்றது என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரி.சரவணராஜா குருந்தூர் மலையில் கட்டப்பட்ட சட்ட விரோத பௌத்த விகாரை வழக்கின் கட்டளைகளால் தொடர்ந்து கிடைக்கப்பெற்ற நெருக்கடிகள், உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் தொடர் அழுத்தங்கள் காரணமாக தனது பொறுப்புக்கள், பதவிகளை இராஜினாமா செய்து விட்டு நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் ரவிகரனால் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீதிபதி சரவணராஜா அவர்களின் பதவி விலகலில் இலங்கை அரசாங்கத்தின் கோர முகம் வெளிப்படுகின்றது. நீதிபதிக்கே இந்நிலமை என்றால் சாதாரண தமிழ் மக்கள் எவ்வளவு கொடூரமான அரசின் கீழ் கொடூரமான அரசாங்கத்தை நடாத்திக்கொண்டிருக்கும் இன வாதிகளின் கீழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த விடயத்திலே நீதியின்பால் அவருக்கு கொடுக்கப்பட்ட மன அழுத்தங்கள் . உயிர் அச்சுறுத்தல்கள் ஊடகங்கள் மூலம் வெளிவந்திருக்கின்றது. இப்படியான நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் கவனத்தில் எடுத்து தமிழ் மக்களுக்கு இப்படியான நெருக்கடிகள் இலங்கையிலே ஏற்படுகின்றது என்பதை உணர்ந்து மக்களுக்கான தீர்வு திட்டங்களையோ அல்லது மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய நிலமையையோ ஏற்படுத்தி தர வேண்டும் என தெரிவித்தார்.

(ம-7,299)

**Romania வேலைவாய்ப்பு விசா**

**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**

(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்) (C-7340)

**021 222 1265,076 250 0098**

### சரவணராஜா பதவி விலகல்
# நீதிப் பொறிமுறையை
## கேள்விக்கு உட்படுத்தியுள்ளது
### ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா பதவி விலகல் நீதிப் பொறிமுறையையே கேள்விக்குறியாக்கியுள்ளது என ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்றையதினம் அவர்கள் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் நீதிபதிகள் தீர்ப்பு வழங்க முடியாத நாட்டின் சட்டவாக்க சபையான பாராளுமன்றை ஒட்டு மொத்த தமிழ் எம்பிகளும் புறக்கணிக்க வேண்டும் என நாம் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு ஊடாக ஆழமாக வலியுறுத்துகின்றோம்

குருந்தூர் சட்டவிரோத பௌத்த கட்டுமானம் தொடர்பாக நீதியான தீர்ப்பு வழங்கியமைக்காக தொடர் அழுத்தம் உயிர் அச்சுறுத்தலுக்கு ஆளாகி முல்லைத்தீவு நீதிபதி பதவியை துறக்க நிர்ப்பந்திக்கப்பட்ட மாண்புமிகு சரவணராஜா அவர்களின் நேர்மையை போற்றும் வகையில் தமிழ்ச்சமூகமாக ஆதரவை வெளிப்படுத்துவதுடன் அவரின் இந்த முடிவுக்கு காரணமான அழுத்தங்களை பிரயோகித்த சகல தரப்பினர் மீதும் நடவடிக்கை எடுக்கும் வரை தமிழர் சார்ந்த அனைத்து கட்டமைப்புக்களும் குறிப்பாக சட்டவாளர்கள் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பிக்கவும் வேண்டுகின்றோம்.

இலங்கையின் சகல முற்போக்கு சக்திகளும் சர்வதேசமும் ஐ.நா அமைப்புக்களும் நீதியை வழங்கும் நீதிபதிக்கே ஏற்பட்டுள்ள இந்த பாரதூர நிலையை சீர்செய்ய நீதி பரிபாலனம் சுயாதீனமாக இயங்க உச்சபட்ச நடவடிக்கைகளை இந்த துக்ககரமான தருணத்தில் எடுக்க வேண்டி நிற்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-7,33,104)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 1931 . 01 . 21



உதிர்வு 2022 . 10 . 09

அமரர் **தாமு வீரசிங்கம்**

**(ஓய்வு நிலை அதிபர்)**

திதி : புரட்டாதி பூரணை

அன்பினால் அரவணைத்த குடும்பத்தின் முதுசமே
குடும்பத்தின் ஒளிச்சுடரே! அப்பா – நீங்கள்
எமைப் பிரிந்து ஆண்டொன்று ஆனதுவே
உங்கள் அன்பிற்காய் ஏங்குதுவே எம் மனம்
ஆற்றுதலின்றி தவிக்கின்றோமே அனுதினம்
பண்பிற்கு இலக்கணமாய் வாழ்ந்த பண்பாளரே
எமைப்பிரிந்து காலம் பல கடந்தாலும்
உங்கள் முகவரியுடன் வாழ்வோம் பரணியிலே
ஏற்றம் பல காண ஏணியாய் உழைத்தவரே – அப்பா
என்றும் பூஜிப்போம் உங்களை நெஞ்சிருக்கும் வரை
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(C-7345)

'கௌரிகோட்டம்' அல்வாய். 077 306 2082 077 735 1803 குடும்பத்தினர்

## யாழ். நோக்கி பயணித்த
# தொடருந்து மோதி
### 4 யானைகள் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கல்கமுவ - அம்பன்பொல பகுதிகளுக்கு இடையில் ரயிலுடன் மோதி 4 யானைகள் உயிரிழந்துள்ளன.

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கி பயணித்த இரவு தபால் ரயிலுடன் மோதியதில் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் என். ஜே. இதிபொலகே தெரிவித்தார்.

விபத்தை அடுத்து ரயில் எஞ்சினில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு தற்போது சீரமைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ரயில் போக்குவரத்திற்கு எவ்வித இடையூறும் ஏற்படவில்லை. (ம-7)

# ரயில் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொடகம, கஹவ பகுதியில் பாதுகாப்பற்ற தொடருந்து குறுக்கு கடவையில் ஏற்பட்ட விபத்து ஒன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று இடம்பெற்றுள்ளது.

பெலியத்தவில் இருந்து மருதானை நோக்கி பயணித்த அதிவேக தொடருந்து, கழிவுப் பொருட்களை ஏற்றிச்செல்லும் லொறியொன்றுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்த நபரின்சடலம் கஹவ தொடருந்து நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்தில் படுகாயமுற்ற மற்றொரு நபர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## துப்பாக்கி அனுமதி பத்திரங்களை
# புதுப்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

துப்பாக்கி அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்கும் நடவடிக்கை ஒக்டோபர் முதலாம் திகதி ஆரம்பமாகி டிசம்பர் 31 ஆம் திகதி நிறைவடையவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த தினத்தின் பின்னர் 2024 ஆம் ஆண்டிற்காக துப்பாக்கிகளுக்கான அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட மாட்டாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, 2024 / 2025 வருடங்களுக்கான தனியார் பாதுகாப்பு நிறுவனங்களின் பதிவுகளைப் புதுப்பிக்கும் நடவடிக்கையும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த தினத்தின் பின்னர் மேற்கொள்ளப்படும் புதுப்பிப்பு நடவடிக்கைகளுக்கு தாமதக் கட்டணம் அறவிடப்படும் அல்லது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

# பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்தி தண்டிக்க வேண்டும்

## ஜெனிவாவில் அன்புமணி ராமதாஸ்

(ஜெனிவா)

**தமிழினப் படுகொலை; பன்னாட்டு குற்றவியல் நீதி மன்றத்தில் இலங்கையை நிறுத்தி தண்டிக்க வேண்டும் என பாமகவின் பாராளுமன்ற உறுப்பினர் அன்பு மணி ராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

ஜெனிவா நகரில் நடைபெற்று வரும் ஐ.நா மனித உரிமைப் பேரவையின் 54 ஆவது அமர்வில் பசுமைத் தாயகம் அமைப்பின் சார்பில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் கடந்த பல பத்தாண்டுகளாகவே இனவாதம், பாகுபாடு மற்றும் வேறு பல வடிவங்களிலான சகிப்புத்தன்மையற்ற செயல்களுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர்.

இலங்கையில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இன்னும் பலர் தொடர்ந்து ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள அரசால் நிகழ்த்தப்பட்ட மனிதகுலத்திற்கு எதிரான 21 ஆம் நூற்றாண்டின் முதலாவது அட்டூழியம் மற்றும் குற்றங்களுக்கு நீதி பெற்றுத் தர வேண்டும் என்ற ஐ.நா மனித உரிமை ஆணையரின் அழைப்பை செயற்படுத்த அனைத்து உறுப்பு நாடுகளையும் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைகள் தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையர் அலுவலகத்தின் இலங்கை பொறுப்புடைமைத் திட்டத்தின் திரட்டப்பட்டுள்ள சாட்சியங்களைக் கொண்டு ஈழத்தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கும் அதிலிருந்து எந்த தண்டனையும் இல்லாமல் இலங்கை அரசு தப்பித்து வரும் போக்கிற்கும் ஐ.நா மனித உரிமை ஆணையத்தின் உறுப்பு நாடுகள் முடிவு கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கை அரசின் மீது பல்வேறு வகையான தடைகளை விதித்தல், ஒவ்வொரு நாடும் அதன் சொந்த நீதிமன்றங்களில் சிவில் குற்றவியல் வழக்குகளை தொடருதல், உலகில் இப்போது செயற்பாட்டில் உள்ள பன்னாட்டு நீதிக்கான நீதிமன்றங்களுக்கு போர்க் குற்றம் குறித்த வழக்குகளை மாற்றுதல் இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி விசாரிக்கும் வகையில் பன்னாட்டு குற்றவியல் நீதி வழங்குவதற்கான பொறிமுறையை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் இதை சாதிக்க வேண்டும் என்று ஐநா மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொள்கிறோம் என அவர் தெரிவித்தார். (நி-5)

# விரைவில் இலங்கைக்கு அனுப்புமாறு கோரி சாந்தனால் மனுத்தாக்கல்

(சென்னை)

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு 32 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்து விடுதலையான சாந்தன் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மனுத்தாக்கலானது நேற்று முன்தினம் சென்னை உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்து மாதங்களாக தான் சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கையில் உள்ள தனது வயதான தாயை பார்க்க போக முடியவில்லை என்றும் மனுவில் சாந்தன் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் மனுவில், தன்னை இலங்கைக்கு அனுப்ப இந்திய அரசு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் எனவே என்னை விரைவாக இலங்கைக்கு அனுப்ப இந்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் உத்தரவிட்டு விரைவாக தன்னை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.


இதற்கமைய சாந்தன் தாக்கல் செய்த மனுவானது எதிர்வரும் திங்கட்கிழமை விசாரணைக்கு உட்படுத்தப்பவுள்ளதாக கூறப்படுகிறது. (நி-5)

# உள்ளூராட்சித் தேர்தல் வேட்புமனுக்கள் செல்லுபடியாகும்-தேர்தல் ஆணைக்குழு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இன்னும் செல்லுபடியாகும் என்றும் அவை பாராளுமன்றத்தில் ஒரு சட்டத்தின் மூலம் மட்டுமே இரத்து செய்யப்பட முடியும் என்றும் தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

கடந்த 20 ஆம் திகதி இடம் பெற்ற பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஆலோசனைக் குழு, உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்பு மனுக்களை இரத்து செய்ய ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியிருந்தது. ஆலோசனைக் குழுவின் தீர்மானம் எதையும் செய்யாது என்றும் வேட்புமனுக்களை இரத்து செய்ய வேண்டுமானால் அதை பாராளுமன்ற சட்டத்தின் மூலம் மட்டுமே செய்ய முடியும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (நி-5)




வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த் திருவிழா நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது. இதில் பல அடியார்கள் கலந்து கொண்டதுடன் அங்கப் பிரதட்சணம், கற்பூரச்சட்டி எடுத்தும் தமது நேர்த்திக்கடன்களை செலுத்தினர்.
(படங்கள் -சிவசாந்தன், மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தர்மமுழக்க’ துடுப்பாட்ட போட்டி இன்று ஆரம்பம்



தருமபுரம் மத்திய கல்லூரி



முழங்காவில் மகா வித்தியாலயம்

கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரி மற்றும் முழங்காவில் மகா வித்தியாலயம் அணிகள் மோதும் 6 ஆவது தர்ம முழக்கம் துடுப்பாட்டத் தொடர் இன்று வெள்ளிக் கிழமை ஆரம்பமாகி நாளையும் இடம்பெறும்.

முழங்காவில் மகா வித்தியாலய மைதானத்தில் குறித்த போட்டி நடைபெறவுள்ளது. 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குறித்த போட்டி 2016, 2017,2018,2019 போன்ற ஆண்டுகளில் நடைபெற்ற போதும் நாட்டின் கொவிட் மற்றும் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக 2020, 2021, 2022 போன்ற ஆண்டுகளில் நடைபெறவில்லை. இந்த வருடம் 6 ஆவது தர்ம முழக்கமாக நடைபெறுகிறது. இதுவரை நடைபெற்ற 5 போட்டிகளில் தருமபுரம் மத்திய கல்லூரி 4 போட்டிகளில் வெற்றி பெற்றிருப்பதுடன் முழங்காவில் மகா வித்தியாலயம் 1 போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.

மேலும் முழங்காவில் மகா வித்தியாலய அணி க.மதுஷன் தலைமையிலும் அதே வேளை தருமபுரம் மத்திய கல்லூரி அணிக்கு இ.லீலன் தலைமையில் களம் காணவுள்ளனர். (5-6-316)

## கிரிக்கெட்டில் கால்பந்து விளையாடி விக்கெட்டினை பறிகொடுத்த ரஹீம்

கிரிக்கெட்டில் பட்ஸ்மேன்கள் வினோதமான முறையில் ஆட்டமிழப்பதை நாம் அவ்வப்போது பார்க்கிறோம். சமீபத்தில் வங்கதேச வீரர் முஷ்பிகுர் ரஹீம் வித்தியாசமான முறையில் அவுட்டானார்.

இது தொடர்பான வீடியோ தற்போது சமூக வலைத் தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

கிரிக்கெட்டில் கால்பந்து திறமையை காண்பித்த முஷ்பிகுர் ரஹீம் குறித்து நெட்டிசன்களும் ரசிகர்களும் சமூக வலைத்தளங்களில் மீம்ஸ்களை பதிவிட்டு வருகின்றனர். (5-6)





அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட உடற்பயிற்சி போட்டிகள் கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமை கண்டியில் நடைபெற்றது. இதில் ஆண்கள் பிரிவில் இளவாலை ஹென்றி அரசர் கல்லூரியும் பெண்கள் பிரிவில் கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் மகா வித்தியாலய அணியும் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினர்.

(படங்கள்-கனகராஜா)

## ஏழு வருடங்களுக்கு பிறகு இந்தியா வந்த பாகிஸ்தான் அணி

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் பங்கேற்பதற்காக பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவை வந்தடைந்துள்ளது.

2023 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் ஒக்டோபர் 5 ஆம் திகதி தொடங்கி நவம்பர் 19 ஆம் திகதி வரை இந்தியாவில் உள்ள 10 நகரங்களில் நடைபெற உள்ளது.

பாபர் அசாம் தலைமையில் அறிவிக்கப்பட்ட பாகிஸ்தான் அணியில் ஃபகார் ஜமான், இமாம்-உல்-ஹக், ஷதாப் கான், சவுத் ஷகீல், இப்திகார் அகமது, சல்மான் அலி ஆகா, முகமது நவாஸ், உசாமா மீர், அப்துல்லா ஷபீக், முகமது ரிஸ்வான், ஹாரிஸ் ரவுஃப், ஹசன் அலி, ஷாஹின் ஷா அஃப்ரிடி, முகமது வாசிம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்நிலையில் 2023 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் பங்கேற்பதற்காக 7 வருடங்களுக்கு பிறகு பாகிஸ்தான் அணி இந்தியாவுக்கு வந்துள்ளது.

இதற்காக நேற்று முன்தினம் பாகிஸ்தானில் இருந்து துபாய் புறப்பட்ட பாகிஸ்தான் அணி, நேற்று மதியம் துபாயில் இருந்து புறப்பட்டு இந்தியாவின் ஹைதராபாத் விமான நிலையத்தில் வந்து இறங்கியுள்ளது.

2016 ஆம் ஆண்டு இருபது-20 உலகக் கோப்பை போட்டிகளுக்கு பிறகு இந்தியாவிற்கு வரும் பாகிஸ்தான் அணி வீரர்களுக்கு உற்சாக வரவேற்பு பிசிசிஐ சார்பில் வழங்கப்பட்டது. (5-6)



# ஆஸி அணிக்கெதிரான தொடரை வென்றது இந்தியா




இந்தியா, அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் உள்ள சவுராஷ்டிரா கிரிக்கெட் சங்க மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலி அணி வெற்றி பெற்றுள்ளது.

டாஸ் வென்ற அவுஸ்திரேலிய அணி கப்டன் பட்டிங்கை தேர்வு செய்து முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி அணி வீரரான டேவிட் வார்னர் மற்றும் மிட்செல் மார்ஷ் களமிறங்கினர். டேவிட் வார்னர் 34 பந்துகளில் 56 ரன்களும் மிட்செல் மார்ஷ் 84 பந்துகளில் 96 ரன்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இவர்களை தொடர்ந்து விளையாடிய, ஸ்டீவன் ஸ்மித் 74 ரன்களும் மார்னஸ் லாபஸ்சாக்னே 72 ரன்களும்அலெக்ஸ் காரே 11 ரன்களும் கிளென் மேக்ஸ்வெல் 5 ரன்களும் கேமரன் கிரீன் 9 ரன்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இந்நிலையில், போட்டியின் முதல் பாதியில் ஆஸி அணி அணி 50 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 352 ரன்கள் எடுத்தது.

தொடர்ந்து, இந்திய அணி 353 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது. தொடக்க வீரர்களாக ரோகித் சர்மா மற்றும் வோஷிங்டன் சுந்தர் களமிறங்கினர். இதில் ரோகித் சர்மா 81 ரன்களை குவித்தார். வோஷிங்டன் சுந்தர் 18 ரன்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து, விராட் கோலி சதம் அடித்த 56 ரன்களிலும் ஷ்ரேயாஸ் ஐயர் 48 ரன்களிலும் கே.எல்.ராகுல் 26 ரன்களிலும் சூர்ய குமார் யாதவ் 6 ரன்களிலும் ஆட்டமிழந்தனர்.

இறுதியில் இந்திய அணி 49.4 ஓவரில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 286 ரன்கள் எடு த்தது. மேலும் இறுதிப் போட்டியில் ஆஸி அணி ஆறுதல் வெற்றி பெற்றுள்ளது.

இருப்பினும், இந்தியா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யா/வடமராட்சி துன்னாலை அருள்மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் தீர்த்தோற்சவ சிறப்பிதழ் - 29.09.2023



## வங்கக்கடலிலே அவதரித்து லவல்லியின் மடியில் தவழ்ந்து வங்கக்கடலில் நீராடிவரும் வல்லிபுரமாயவனே வணங்குகின்றோம் உன் அடியை

சரித்திர பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமியின் கொடியேற்றம் கடந்த செப்டெம்பர் 14 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பதினேழு மகோற்சவங்கள் நடைபெறுகின்றது. இம் மகோற்சவங்களில் ஆலய வரலாற்றுத் தொடர்புடைய விழாவாக சிறந்து விளங்குவது சமுத்திர தீர்த்த திருவிழாவாகும். சமுத்திர வரலாற்று ரீதியான இத்திருவிழாவிற்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்து பெருந்திரளான பக்தர்கள் வருகை தருவார்கள். இன்று மாலை எம்பெருமான் கற்கோவளம் கடற்கரைக்கு தீர்த்தமாடுவதற்குச் செல்வார் பக்தர்கள் சூழ்ந்திருக்க மாயவன் சக்கரத்தை கற்கோவள பக்தர்கள் தோளிலே காவிக்கொண்டு செல்வார்கள்.

**பரித்ராணய ஸாதூநாம்**
**விநாசாய சதுஷ்க்ரதாம்**
**தர்மஸம்ஸ்தாப நார்த்தாய**
**ஸம்பவாமி யுகே யுகே- பகவத்கீதை : அத் 4.சுலோ 8**

தர்மம் அழிந்து அதர்மம் தலை தூக்கும் போது தர்மத்தை காக்கவும் அதர்மத்தை அழிக்கவும் நான் யுகம் தோறும் யுகம் தோறும் அவதரிக்கிறேன்.

காத்தல் கடவுளாகிய ஸ்ரீ மகா விஷ்ணு ஸ்ரீ வல்லிபுரம் எனும் புராதன பதியிலே ஸ்ரீ சுதர்சன வடிவில் எழுந்தருளியிருக்கும் இவரை சக்கரத்தாழ்வார் என்றும் அழைப்பர். சக்கரத்தாழ்வார் ஸ்ரீ நரசிம்மமூர்த்தியின் அம்சமானவர்.ஸ்ரீ நரசிம்ம மூர்த்தி தனது நாமத்தை உச்சரிக்கும் பக்தனை காத்தருள தூணிலே தோன்றியவராவார்.

இச் சம்பிரதாயத்தில் வந்த ஸ்ரீ வைஷ்ணவர்களை தமக்கு துன்பம் நேருகையில் ஸ்ரீ சுதர்சன ஆழ்வாரின் தோத்திரங்களை பாராயணம் செய்வார். இதே போன்ற ஸ்ரீ வல்லிபுர நாதனும் தன்னை நாடிவரும் பக்தர்களின் துயர் போக்கி அருளுகின்றார்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தீர்த்தமாடி வருகின்ற இத் தினத்தில் நாமும் அவரது புகழைப் போற்றி துதித்தால் எமது இடரும் களையப்படும் என்பது திண்ணம். இன்று வெள்ளிக்கிழமை (29.09.2023) பௌர்ணமி தினத்தில் அந்திசாயும் போது சக்கரத்தாழ்வாராக வங்கக்கடலில் தீர்த்தமாடும் எம்பெருமான் அனைவருக்கும் இன்னருள் புரிவாராக.

**சாமஸ்ரீ தேசமானிய Lion த.ஜெயரூபன்-சமாதான நீதவான்**
**கணக்காய்வாளரும் வருமானவரி ஆலோசகரும் மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பு மற்றும்**
**அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் உறுப்பினர், சமூக சேவையாளர் - கற்கோவளம்.**

## பிரதம குருமார்களின் நல்லருளாசிகள்





நிகழும் சுபமங்கலகரமான சோபகிருது (27) ஆவணி 28 ஆம் (14.09.2023) நாள் வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து மிகவும் திருப்தியான முறையில் நடைபெற்று நேற்றைய தினம் எம் பெருமானது இரதோற்சவமானது மிகவும் சிறப்பான முறையில் நடந்தேறியது.

இன்றைய தினம் புரட்டாதி 12 ஆம் நாள் (29.09.2023) வெள்ளிக்கிழமை வரலாற்றுடன் தொடர்புகொண்ட மிகவும் பிரசித்தமான அதி முக்கியத்துவம் வாய்ந்ததான சமுத்திர தீர்த்தம் எம் பெருமான் திருவருளால் சிறப்பாக நடைபெறவுள்ளது. மாலை நேரத்தில் சக்கரமாயவன் அவதரித்தலின் அந்நேரத்தில் கடலாடல் திருவிழா நடைபெறுவது சிறப்பு வாய்ந்ததொன்றாகும்.

எல்லாம் வல்ல வல்லிபுர மாயவன் தாழ்பணிந்து பெருமைமிகு மாயவனின் சமுத்திர தீர்த்தத்தில் கலந்து சிறப்பிக்கும் அடியவர்களுக்கும் வரமுடியாமல் மாயவன் புகழ்பாடும் அடியவர்கள் அனைவருக்கும் மாயவன் சுபீட்சம் நிறைந்த நல்வாழ்வை நல்குவான்.

மாயவனது நல்லாசிகளையும் எமது நல்லாசி வாழ்த்துக்களையும் கூறிக் கொள்வதில் நாம் பெருமை அடைகின்றோம்.

ஓம் நமோ நாராயணா

**பிரம்மஸ்ரீ.ச.க.சுதர்சனக்குரு (கே.பி.)**
**பிரம்மஸ்ரீ.சுதர்சன கணபதீஸ்வரக்குரு**
(பிரதம குருமார்கள், மகோற்சவ குருவும்)

## செங்கமலக் கண்ணன் திருமாதுறை மாதீபன் பைந்துளபன் எங்கள் பதி

வங்காள விரிகுடாவின் கற்கோவளம் கிராம கடற்கரையில் புரட்டாதிப் பூரணை நன்நாளில் 'லவல்லி' என்ற பக்தையின் இடர் நீக்க மச்சமாய் கடலில் தோன்றி பக்தையின் மடியிலே மகவுவாய் காட்சி மாறி அடியார்களால் சுமந்து வரப்பட்டு சக்கரமாய் உருமாறி கருவறையில் இன்றும் மூலமூர்த்தியாய் வீற்றிருப்பவரே வல்லிபுர மாயவன்.

வருடந்தோறும் புரட்டாதிப் பூரணை நன்நாளே மகா சமுத்திர தீர்த்தம் நடைபெறுகின்றது. வல்லிபுர ஆழ்வாரின் தோற்றமும் வரலாறும் பின்னிப் பிணைந்த நாளிலே பெருமான் உற்பவித்த கடற்கரையிலே ஆண்டுதோறும் இடம்பெறுகின்றது.

பரந்தாமன் ஆலயங்கள் பாரெங்கும் ஏராளம் இருப்பினும் இவ்வல்லிபுர மாயவன் அடியவரின் பேராக வல்லிபுர ஆழ்வார் என நாமம் சூழ விளிக்கப்படுகின்றார்.

எல்லாம் வல்ல பெருமான் அருள் எங்கும் நிறைய வந்திப்போம்.

திரு.ச.கேசவானந்தன், செயலாளர்,
அறங்காவலர் சபை, வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்.


## ஆடிடுவோம் கடற்தீர்த்தம் நன்றே

ஆடிடுவோம் கடற்தீர்த்தம் என்று ஆவல்
அடங்காத அடியவர்கள் விரைந்து வர
தேடியெழுந் தோடுதிரை கரையைக்கொஞ்ச
திகழைந்து தலையரவிற் காட்சி தந்து
தடங்கடலா யுலகிலருள் வெள்ளம் பாய்த்
தாயாகவெம்மைக் காக்கும் வண்ணம் பூண்டு
மடமையிலா வல்லிபுரம் பதியில் நின்று
பேரருளைத் தந்தருள்வாய் போற்றி போற்றி.

கலாபூஷணம் மு.தணிகாசலம், கற்கோவளம்.

சிறீரங்கம் ரெக்ஸ் றைல்ஸ்
பிரதான வீதி, நெல்லியடி,
NTB வங்கிக்கு அருகில்
கிளை-1 வதிரி வீதி, உடுப்பிட்டி.

விக்னேஸ்வரா திருமண மண்டபம்
Room, Hall A/C Facility
Conferene Hall With 200 Seating Capacity
யாழ்.பிரதான வீதி, வல்வை.
தொ.பே: 021 226 1567


அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
சரவணா மகாலட்சுமி தங்கமாடம்
இல.93.பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே: 021 321 4577


தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு
தரன் நகை மாளிகை
ம.ம.வி.வீதி,நெல்லியடி
தொ.பே: 021 321 9254
கிளை
தரன் நகை மாளிகை
பிரதான வீதி,
பருத்தித்துறை.


தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு நாட வேண்டிய இடம்
வைஷ்ணவி நகைப்பூங்கா
பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே:- 021 226 4513

நியூ அம்பிகை ஜுவல்லறி
NEW AMBIKAI JEWELLERY

Articles All Guaranteed
And Genuine Quality Jewellery
79,பிரதான வீதி, நெல்லியடி.
021 226 3285
077 656 9559


நவீன வடிவமைப்புக்களில்
தரமான 22 கரட் நகைகளுக்கு
நாட வேண்டிய இடம்
சிறீ சுசீலா நகை மாளிகை
239, பிரதான வீதி, பருத்தித்துறை.
தொ.பே:- 021 226 1003

(c-7343)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய மின்மானி கட்டணத்துக்கான மானிய விலையை குறைக்க தீர்மானம்

(அராலி)

தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள விவசாய மின்மானி வாடகை கட்டணம் முன்னர் அறவிடப்பட்ட 300 ரூபாவுக்கு குறைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

யாழில் விவசாய பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கான மின்னிணைப்புகள் கடந்த காலங்களில் வழங்கப்பட்டன. அவற்றின் மின்மானிகளுக்கான மாத வாடகை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள இந்நிலையில் எரிபொருள் விலையேற்றத்தால் பாதிப்படைந்துள்ள நிலையில், தற்போது மின்மானிக் கட்டணத்தாலும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் துறைசார் அதிகாரிகளுடன் கலந்துரையாடி விவசாயிகளுக்கான மின்மானி வாடகையை மானிய அடிப்படையில் அறவிடுவதற்கான தீர்மானமொன்றை மேற்கொண்டு அமைச்சின் கவனத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என கடிதம் ஊடாக கோரிக்கையை நேற்று முன்தினம் இடம்பெற்ற குழுக் கூட்டத்தில் முன்வைத்திருந்தேன்.

இதன்படி கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பில் ஆராயப்பட்டு, யாழ்.மாவட்டத்தில் விவசாய மின்னிணைப்பு பெற்று தற்போது குறித்த விலைக்கட்டண அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் விபரங்களையும் கோரிக்கையையும் வழங்குமாறு துறைசார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்விபரங்களை மின்சார சபையின் கவனத்திற்கு கொண்டுசென்று மின்மானிக் கட்டணத்துக்கான மானிய விலைக்குறைப்பை செய்யவும் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார். (5-6-104)

# நாய்களுக்கான விலங்கு விசர்நாய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள பஸார் I பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (ஏ.ஆர்.வி) ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி காலை 9-மு.ப 11 வரை முத்தமிழ் வீதி பாலர் பாடசாலை, மு.ப 11 -பி.ப 1 வரை மீனாட்சி அம்மன் கோவிலடி, பி.ப 2.30-பி.ப 4 மணிவரை நமசிவாயம் பாடசாலை முன்பாகவும் 4 ஆம் திகதி காலை 9-மு.ப 11 வரை கூழாவடி வைரவர் கோவிலடி, பி.ப 2.30-4 வரை சிராம்பியடி சனசமூக நிலையம், பலாலி வீதி 2 ஆம் ஒழுங்கையும் 5 ஆம் திகதி காலை 9-மு.ப 11 வரை யாழ்.வீதி, மு.ப 11- பி.ப 1 வரை பெருமாள் கோவிலடி, பி.ப 2.30-பி.ப 4 வரை கன்னாதிட்டி காலி கோவிலடியும் 6 ஆம் திகதி காலை 9-மு.ப 11 வரை சிவன் வடக்கு வீதி பாலர் பாடசாலை, பி.ப 2.30-பி.ப 4 வரை மாவடி வீதியும், 9 ஆம் திகதி காலை 9-மு.ப 11 பிரப்பங்குளம் வீதி, மு.ப 11-பி.ப 1 B.A.தம்பி லேன், பி.ப 2.30-பி.ப 4 வரை கில்னர் வீதி ஆகிய இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

ஓர் நாய்க்கான உரிமக் கட்டணமாக 50 ரூபாய் அறிவிடப்படும் என யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (5-6)

# சுகாதார விதிமுறைகளை மீறிய உணவகங்களுக்கு மன்று தண்டம் விதிப்பு

(சாவகச்சேரி)

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்களில் சுகாதார விதிமுறைகளை மீறியமைக்காக அதன் உரிமையாளர்களுக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தினால் எச்சரிக்கையுடன் தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளது.

பூநகரி மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தலைமையில் பிரதேச பொதுசுகாதார பரிசோதகர்கள் இணைந்து பூநகரி, ஜெயபுரம், நாச்சிக்குடா மற்றும் முழங்காவில் பகுதிகளில் கடந்த வாரத்தில் மேற்கொண்ட விசேட உணவுப் பாதுகாப்பு பரிசோதனைகளின் போது சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக உணவு கையாள்வதிலும் அடிப்படைக் கட்டமைப்புகளை சீராக பேணாமைக்குமாக ஐந்து உணவு கையாளும் நிறுவனங்களுக்கெதிராக கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட இருபத்தாறு குற்றச்சாட்டுகளுக்குமாக ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டதோடு கடும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

மேலும் குற்றம் சாட்டப்பட்டு வழக்கிற்காக சமுகமளிக்காத ஏனைய ஐந்து உணவு கையாளும் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் அந்தந்த பிரதேச பொலிஸ் நிலையங்களூடாக திறந்த பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6-30)

# காரைநகர் கடற்பகுதியில் 125 கிலோ கேரளா கஞ்சா மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காரைநகர் பகுதியில் 125 கிலோ கிராம் கேரளா கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காரைநகர் கடற்பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு சந்தேகத்திற்கு இடமான படகொன்றினை கடற்படையினர் சோதனையிட முயன்ற போது, படகில் இருந்த நபர்கள் தப்பி சென்றுள்ளனர்.

தப்பி சென்றவர்களில் ஒருவரை கடற்படையினர் மடக்கி பிடித்துள்ளனர்.

பிடிபட்ட நபரை படகின் அருகில் அழைத்து சென்று படகினை சோதனையிட்ட போது




படகில் மூன்று உரைப்பைகளில் 125 கிலோ கிராம் கஞ்சா பொதி செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

அதேவேளை குறித்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு இரண்டரை கிலோ கஞ்சாவை மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்ற சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-6-33-104)



உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண கோட்டைப் பகுதியில் நேற்று தொல்லியல் திணைக்களம் மற்றும் யாழ். பல்கலைக்கழக கல்லூரி இணைந்து சிரமதானம் மரபுரிமை பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் விழிப்புணர்வு பலகை திரை நீக்கமும் நடைபெற்றது.

(படம்:-சிவசாந்தன்)

## கருணாகரப் பிள்ளையார் ஆலய தீர்த்தம் இன்று

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் -பரத்தைப் புலம் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோவில் மஹோற்சவம் கடந்த 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் இடம்பெற்ற உற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழா முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும். அன்று மாலை 7 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (5-6)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலையின் திறந்த வெளி அரங்கில் அதிபர் கு.அகிலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவரும் இலங்கை வெளிநாட்டு சேவை சர்வதேச சொத்து முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பிரிவின் பிரதிப் பணிப்பாளரான கிரிதரன் கலந்து கொள்ளவுள்ளார். (5-6)

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான கண்புரை சத்திரசிகிச்சையினை யாழ். போதனா வைத்தியசாலையில் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்களுக்கான சத்திரசிகிச்சைகள் கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி.மலரவனின் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்கண்புரை சத்திரசிகிச்சை திட்டமானது ஐக்கிய இராச்சியத்தின் Assist RR நிறுவனத்தினால் ஒருங்கிணைக்கப்படுவதுடன் சத்திரசிகிச்சைகளுக்கான கண்வில்லைகளும், சத்திரசிகிச்சை நுகர்வுப் பொருட்களும் மற்றும் மருந்துப் பொருட்களும் மலேசியாவைச் சேர்ந்த அலாக்கா மற்றும் ஆனந்தா நிறுவனத்தினரால் வழங்கப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண்பரிசோதனை முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவில் திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச மருத்துவமுகாம் அதே தினத்தன்று காலை 9 மணி தொடக்கம் மணியந்தோட்டம் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (5-6)

# பெரும்போக நெல் விதைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணி பிரதேசத்தில் பெரும்போக நெற்செய்கைக்கான நெல் விதைப்பு விழா நேற்று இடம்பெற்றது.

சமய சம்பிரதாயப்படி பெரும் போகத்துக்கான நெல் விதைப்பு விசேட வழிபாடுகளின் பின்னர் இடம்பெற்றது.

இதில் பெருமளவிலான விவசாயிகள் பெரும்போகத்துக்கான நெல்விதைப்பில் ஈடுபட்டதுடன் தமது வயல் நிலங்களை பதப்படுத்தி, வரம்பு கட்டலிலும் ஈடுபட்டனர். (5-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாவது மாடியிலிருந்து குதித்து தன்னுயிரை மாய்த்த சிறுவன்

## தொலைபேசிக்கு அடிமையாகி மன உளைச்சலுக்கு ஆளானவர் என தகவல்

(கொழும்பு)

தெல்தெனிய வைத்தியசாலையின் ஐந்தாவது மாடியில் இருந்து குதித்து தன்னுயிரை மாய்த்துக் கொண்ட 17 வயதுடைய சிறுவன் தொலைபேசிக்கு அடிமையாகி மன உளைச்சலுக்கு ஆளானவர் என பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்து அலைபேசியை கைப்பற்றியதையடுத்து கத்தியால் தனது உடலின் பல பாகங்களை வெட்டியதால் மன உளைச்சலுக்கு ஆளான இளைஞன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக தெரிய வந்துள்ளது.

பன்வில கந்தேகும்புர பிரதேசத்தை சேர்ந்த ஹர்ஷன லக்ஷான்தில் ருக்ஷ (வயது 17) என்ற சிறுவன் ஒரு நாளைக்கு 18 மணித்தியாலங்களை அலைபேசியுடன் தனியாக செலவிடுவதுடன், தொடர்பு இல்லாமல்நேரத்தை கடத்துவதற்காக பல்வேறு வீடியோ கேம்களுக்கு அடிமையாகியுள்ளமையும் தெரியவந்துள்ளது. (நி-5)

# ஐ.எம்.எப் இன் 2 ஆம் கட்ட நிதியை விரைவில் பெறுவோம்

## சியம்பலாபிட்டிய நம்பிக்கை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையை இலங்கை விரைவில் பெறும் என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் முழுமையான பொருளாதார மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லை என சர்வதேச நாணய நிதியம் நேற்று முன்தினம் அறிவித்திருந்த நிலையில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையை விரைவாக பெற்றுக் கொள்வோம் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும் பொருளாதார நெருக்கடியின் மிகவும் கடினமான தருணங்களை வெற்றிகரமாகச் சமாளித்த அரசாங்கம், எதிர் வரும் நாட்களில் அதிலிருந்து முற்றாக விடுபடுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதிகோரி பிரிட்டனில் கவனயீர்ப்பு




(லண்டன்)

இலங்கையில் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி பொதுமக்களுக்கு நீதி கோரி தமிழர்களுக்கான சுதந்திர வேட்டை என்ற அமைப்பினால் பிரித்தானிய பாராளுமன்றத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. (நி-5)

# இதய நோய்களால் உயிரிழப்போர் அதிகரிப்பு

(கொழும்பு)

இதய நோய்களினால் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றா நோய்களுக்கான பணியகத்தின் சமூக வைத்திய நிபுணர் ஷெரீன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 2020 ஆம் ஆண்டில் அரசாங்க வைத்தியசாலைகளில் 52% மரணங்கள் மாரடைப்பால் ஏற்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்:உத்தரம்
உயரம்: 168 cm
தகைமை/தொழில்: BBM 2 ஆம் வருடம் pvt company
எதிர்பார்ப்பு: வெளிநாடு/அரச வேலை
தொ.இ: B/13986

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 12
உயரம்: 5' 5
தகைமை/தொழில்: தச்சுவேலை
எதிர்பார்ப்பு: படித்த பெண் (35 வயதுக்குட் பட்டவர்கள்)
தொ.இ: B/13987

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம் : புனர்பூசம்
கி.பா: 28
உயரம்: 5' 11
தகைமை/தொழில்: BSc(civil engineer), MSc,Civil Engineer (pvt)
எதிர்பார்ப்பு :Doctor, Engineer, software
தொ.இ: B/13988

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: மூலம் 10 இல் சூரி. செவ்
கி.பா: 30 1/4
உயரம் : 5' 7
தகைமை/ தொழில்: BA 3rd year விவசாயம்
எதிர்பார்ப்பு: உள்நாடு (அரச தொழில்)/ வெளிநாடு
தொ.இ: B/13991

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 28 3/4
உயரம்: 5' 2
தகைமை/தொழில்: College, BSc(final year) Teacher (அரச)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்/ வெளிநாடு
தொ.இ:G/13990

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 59
உயரம்: 160 cm
தகைமை/தொழில்:BA
எதிர்பார்ப்பு: வெளிநாடு (பிரான்ஸ்.லண்டன்)
தொ.இ: G/13996

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 41
உயரம்: 5' 6
தகைமை/தொழில்: BBA
எதிர்பார்ப்பு: பொறியியலாளர்/ உயர்பதவி
தொ.இ:G/13999

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 47
உயரம் :5' 4
தகைமை/தொழில்: HNDIT தனியார் நிறுவனம்
எதிர்பார்ப்பு: வெளிநாடு/ அரச உத்தியோகம்.
தொ.இ:G/11871

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

**பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**


# இராசிபலன்

29.09.2023
புரட்டாதி 12, வெள்ளிக்கிழமை
பூரணை பிற்பகல் 4.35 மணிவரை
உத்திரட்டாதி பின்னிரவு 1.31 மணிவரை

சுபநேரம் -6.02-7.32 மணிவரை
இராகுகாலம்-10.32-12.02 மணிவரை
பூரணை விரதம் சித்தாமிர்தம்
வல்லிபுரமாழ்வார் தீர்த்தம்

சந்திராஷ்டமம்- ஆயிலியம்,மகம்.


வளவன்





வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.





கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.





தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம்,செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்,போசன சுகமுண்டு.





கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு,சகோதர வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.





இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்,மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், வாகன சுகமுண்டு, பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.





வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை தேவை.





கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி கூடும் நாள்.





ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.





மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசனசுகமுண்டு.




குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம்,சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.




நண்பர்கள் வழியில் நம்பிக்கைகள் நடைபெறலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்,சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.





குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

தலைக்கும் இதயத்திற்கும் கொடுக்கும் பயிற்சியே கல்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உலக சாதனை படைத்துள்ள வெங்காயம்



(லண்டன்)

இங்கிலாந்து நாட்டில் ஹரோ கேட் நகரில் அண்மையில் இலை யுதிர்கால மலர் கண்காட்சியையொட்டி காய்கறி போட்டி நடத்தப் பட்டது.

இப்போட்டியில் மிகப் பெரிய அளவிலான காய் கறிகள் மற்றும் மலர்கள் இடம்பெற்றுள்ளன.

அந்த வகையில் இங்கிலாந்து நாட்டின் வடக்கு யார்க்ஷயர் பகுதியை சேர்ந்த தோட்ட விவசாயி கரேத் கிரிபின் என்பவர் தனது தோட்டத்தில் விளைந்த பிரம்மாண்டமான வெங்காயத்தை காட்சிப்படுத்தியுள்ளார்.

குறித்த வெங்காயம் 8.97 கிலோ எடை கொண்டதாக இருந்ததுடன் உலகிலேயே பெரிய வெங்காயம் என்று உலக சாதனை படைத்துள்ளது.

இதற்கு முன்பு 2014 ஆம் ஆண்டு 8.4 கிலோவில் பெரிய வெங்காயம் வளர்க்கப்பட்டதே சாதனையாக இருந்தது.

அந்த சாதனை முறியடிக்கப்பட்டுள்ள நிலையில் கிரிபின் தோட்டத்தில் வளர்ந்த வெங்காயத்தின் புகைப்படங்கள் சமூக வலைத் தளங்களில் வைரலாகி வருகின்றன. (நி-5)

## உடலில் தனது மகளின் பெயரை 667 முறை பச்சை குத்திய நபர்



(லண்டன்)

இங்கிலாந்தை சேர்ந்த ஒருவர் அவரது மகளின் பெயரை தனது உடலில் 667 முறை பச்சை குத்தி கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

49 வயதான மார்க் ஓவன் எவன்ஸ் ஏற்கனவே தனது மகளின் பெயரான லூசி என்பதனை 267 முறை பச்சை குத்தி கடந்த 2017 ஆம் ஆண்டு சாதனை படைத்திருந்தார்.


இதனையடுத்து 2020 ஆம் ஆண்டு அமெரிக்காவை சேர்ந்த டீட்ரா விஜில் என்பவர் தனது பெயரை உடலில் 300 முறை பச்சை குத்தி மார்க் ஓவன் எவன்ஸின் சாதனையை முறியடித்தார்.

தொடர்ந்து எவன்ஸ் விஜிலின் சாதனையை முறியடித்து மீண்டும் சாதனை படைக்க திட்டமிட்டார்.

அதன்படி கின்னஸ் சாதனை அமைப்புக்கு தகவல் தெரிவித்து, 2 டாட்டூ கலைஞர்கள் மூலம் தனது உடலின் முழுப்பகுதியிலும் மகளின் பெயரை 667 முறை பச்சை குத்தி சாதனை படைத்துள்ளார்.

இதுகுறித்து மார்க் ஓவன் எவன்ஸ் கூறுகையில், இந்த சாதனையை எனது மகளுக்கு அர்ப்பணிக்கிறேன் என்றார். (நி-5)

## உஸ்பெகிஸ்தான் விமான நிலையத்தில் சக்திவாய்ந்த குண்டுவெடிப்பு



(தாஷ்கந்து)

உஸ்பெகிஸ்தான் நாட்டின் தலைநகர் தாஷ்கந்தில் விமான நிலையத்தின் அருகே உள்ள சுங்க கிடங்கில் சக்தி வாய்ந்த குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது. இதுபற்றி தகவல் அறிந்த தீயணைப்பு வீரர்கள், மீட்பு குழுவினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டார்கள்.

இந்த குண்டு வெடிப்பின் போது அருகே உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளிலும் தீ பற்றியது. இதில் சிலருக்கு காயம் ஏற்பட்டது.

காயமடைந்தவர்களுக்கு அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. குண்டு வெடிப்புக்கான காரணம் குறித்து விசாரணை நடக்கிறது. (நி-5)

## 4 தமிழ் திரைப்படங்கள் ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரை




(டில்லி)

தமிழில் 4 திரைப்படங்களுக்கு ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

இந்திய திரைப்பட கூட்டமைப்பு சார்பில் 96 ஆவது ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரை செய்யப்படும் திரைப்படங்கள் குறித்த அறிவிப்பை பரிந்துரை குழுவினர் வெளியிடும் நிகழ்ச்சி சென்னை, அண்ணாசாலையில் உள்ள தென்னிந்திய வர்த்தக சபையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மொத்தம் 22 திரைப்படங்கள் பரிந்துரைக்கு அனுப்பப்படுகிறது.

இதில், தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், மராத்தி உள்ளிட்ட மொழிகளில் இருந்து 22 திரைப்படங்கள் ஆஸ்கர் விருது பரிந்துரைக்கு அனுப்பப்படுகிறது.

தமிழில் இயக்குநர் வெற்றி மாறன் இயக்கத்தில் வெளியான "விடுதலை -1", மாரிசெல்வராஜ் இயக்கத்தில் வெளியான "மாமன்னன்", வெங்கி அட்லூரி இயக்கத்தில் "வாத்தி", இயக்குநர் பொன்குமார் இயக்கத்தில் வெளியான "1947 ஆகஸ்ட் 16" திரைப்படமும் முன்மொழியவுள்ள பட்டியலில் உள்ளது.

தமிழில் 4 திரைப்படங்களும் தெலுங்கில் 4 திரைப்படங்களும் இந்தியில் 11 திரைப்படங்களும் மலையாளத்தில் ஒரு திரைப்படமும், மராத்தியில் 2 திரைப்படமும் இந்த பரிந்துரை பட்டியலில் இடம் பெற்றுள்ளன. (நி-5)

## தொழிலாளர்களின் போராட்டத்தில் பங்கேற்ற ஜோ பைடன்




(வோஷிங்டன்)

அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தில் நடைபெற்று வரும் ஆட்டோ மொபைல் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஜனாதிபதி ஜோ பைடன் கலந்து கொண்டு அவர்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான பரபரப்பு அதிகரித்துள்ள நேரத்தில் ஜோ பைடனின் இந்த செயல் முக்கியத்துவம் வாய் ந்ததாக பார்க்கப்படுவதோடு அமெரிக்க வரலாற்றிலேயே தொழிலாளர்களின் போராட்டத்தில் கலந்து கொண்ட முதல் ஜனாதிபதி என்ற பெரு மையையும் அவர் பெற்றுள்ளார். (நி-5)

## உக்ரை... ஒரே நா...

❖ போர் தொடங்...

(கீவ்)

உக்ரைன் மீது ர... ஆண்டைக் கடந்த... இடம்பெற்று வரு... வீரர்களை இழந்து... கிட்டத்தட்ட 2 இலட்... என உக்ரைன் தெரி...

இந்தப் போர் தாக்குதலில் எதிரி படைகளின் தினசரி இழப்பு குறித்து உக்ரைன் ஆயுதப்படை தொடர்ந்து அறிக்கை வெளியிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ன் படைகளின் அதிரடித் தாக்குதல்
# ளில் 320 வீரர்களை இழந்த ரஷ்யா

## ங்கி இதுவரை 2,76,990 ரஷ்ய வீரர்கள் பலி



**ரஷ்யா முன்னெடுத்து வரும் இராணுவ நடவடிக்கை ஓர் ந்த நிலையிலும் இன்று வரை தாக்குதல் சம்பவங்கள் ருகிறது. இந்நிலையில் ஒரு நாள் மட்டும் ரஷ்யா 320 ந்துள்ளதாகவும் போர் தொடங்கியதிலிருந்து இன்று வரை லட்சத்து 76 ஆயிரத்து 990 வீரர்களை ரஷ்யா இழந்துள்ளது தரிவித்துள்ளது.**

வருகிறது.

அதனடிப்படையில், நேற்று முன்தினம் மட்டும் ரஷ்யா 320 வீரர்களை இழந்து இருப்பதாகவும் உக்ரைன் தெரிவித்துள்ளது.

ஏவுகணை தாக்குதல், ட்ரோன் தாக்குதல், பீரங்கி தாக்குதல் என இரு நாடுகளும் மாறி மாறி தாக்குதலை தொடர்ந்து வருகின்றனர்.

அத்துடன் 3 டாங்கிகள், 4 கவச வாகனங்கள், 24 ட்ரோன்கள் ஆகியவற்றையும் ரஷ்யா உக்ரைனிடம் இழந்துள்ளதாக அறிவித்துள்ளது.

போர் தொடங்கியதில் இருந்து இது நாள் வரை ரஷ்யா கிட்டத்தட்ட 2,76,990 இராணுவ வீரர்களை இழந்துள்ளது என உக்ரைன் அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## காலிஸ்தான் பயங்கரவாதிகள் மீது கனடா நடவடிக்கை எடுக்காதது ஏன்?

### இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கேள்வி



(நியூயோர்க்)

இந்தியாவின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் பயங்கரவாதிகளுக்கு கனடா புகலிடம் அளித்து வருகிறது. அவர்கள் இது தொடர்பான எந்த நடவடிக்கையையும் எடுக்காதது ஏன்? என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கேள்வி எழுப்பினார்.

நியூயோர்க் நகரில், வெளியுறவுக்கான கவுன்சில் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. இதில், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் உட்பட பல நாடுகளின் வெளியுறவுத்துறை மந்திரிகள் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் இந்தியா - கனடா பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குற்றச்சாட்டுக்கு ஏற்கனவே நாங்கள் பதிலளித்து விட்டோம். இது போன்று கொலை செய்வது இந்தியாவின் கொள்கை அல்ல. இதில் இந்திய அரசுக்கு தொடர்பு உள்ளதாக ஏதாவது குறிப்பிட்ட சிறிய ஆதாரம் இருந்தாலும் அதை கொடுக்கலாம். அதை, இந்தியா உரிய முறையில் கவனிக்கும் என தெரிவித்துள்ளோம் என்று தெரிவித்தார். (நி-5)

## நோயை விட நோய்க்கான தடுப்பூசி கடுமையாக இருக்கக் கூடாது

### எலான் மஸ்க்




(வோஷிங்டன்)

நோயினால் ஏற்பட்ட உடல் ரீதியான சிக்கலை விட தடுப்பூசி செலுத்தி கொண்ட பிறகு பலருக்கு அதிக சிக்கல்கள் ஏற்பட்டன. நோய் தடுப்புக்கான தடுப்பூசி, நோயை விட கடுமையான விளைவுகளை தர கூடாது என எலான்மஸ்க் தெரிவித்துள்ளார்.

2019 வருட இறுதியில்சீனாவில் தோன்றிய கொரோனா எனும் வைரஸ் தொற்று, 2020 இல் உலகம் முழுவதும் பரவி, உலக நாடுகளை அச்சுறுத்தி, உலக பொருளாதாரத்தை நலிவடைய செய்து லட்சகணக்கானவர்களை பலி வாங்கியது.

இதனை எதிர்கொள்ள இந்தியா உட்பட பல நாடுகள் தடுப்பூசியை கண்டுபிடித்து அவற்றை அந்தந்த நாட்டு மக்கள் கட்டாயமாக செலுத்திக் கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தின. விருப்பமில்லையென்றாலும் அரசாங்கங்கள் கட்டாயமாக்கியதால் மக்கள் சில மாத கால இடைவெளிகளில் ஒன்றன் பின் ஒன்றாக செலுத்தி கொண்டனர்.

இந்நிலையில், கொரோனா தடுப்பூசியின் பயன்பாடு குறைந்து வருவதாகவும்சில நாடுகள் அதனை உபயோகிப்பதையே நிறுத்தி விட்டதாகவும் எக்ஸ் வலைத்தளத்தில் ஒரு பயனர் கருத்து தெரிவித்திருந்தார்.

இதற்கு தனது அதிகாரபூர்வ எக்ஸ் கணக்கில் பதிலளித்த எக்ஸ் நிறுவனத்தின் தலைவர், எலான் மஸ்க் தெரிவித்திருப்பதாவது,

மக்கள் கட்டாயமாக தடுப்பூசிகளையும் பூஸ்டர்களையும் செலுத்தி கொள்ள வேண்டும் என அரசாங்கங்கள் கட்டாயப்படுத்தியதை நான் நாகரிகமற்ற அத்துமீறலாக கருதுகிறேன்.

அதிலும் கார்ப்பரேட் நிறுவனங்கள் தங்கள் ஊழியர்கள் தடுப்பூசி செலுத்தியிருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்பதில் எனக்கு விருப்பமில்லை. தடுப்பூசி செலுத்தி கொள்ளவில்லை என்பதால் ஒரு நல்ல ஊழியரை பணி நீக்கம் செய்வதற்கு பதிலாக நானே சிறைக்கு சென்றிருப்பேன்.

அது மட்டுமல்ல நானும் மூன்றாவது டோஸ் தடுப்பூசி செலுத்தி கொண்ட பின் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டேன் என்று கூறினார். (நி-5)

## உலகின் 8 ஆவது கண்டமாக ஜீலந்தியா கண்டுபிடிப்பு

(வெலிங்டன்)

உலகில் ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, அண்டார்டிகா ஆகிய 7 கண்டங்கள் உள்ள நிலையில், உலகில் 8 ஆவது கண்டத்தை புவியியல் ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். இந்த புதிய கண்டத்தை விஞ்ஞானிகள் ஜீலந்தியா (Zeal andia) என அழைக்கிறார்கள்.

கண்டுபிடிக்கப்பட்ட புதிய கண்டம் 375 ஆண்டுகள் மறைந்திருந்ததாகவும் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

ஆராய்ச்சியின் விபரங்கள் டெக்டோனிக்ஸ் இதழில் வெளியிடப்பட்டுள்ளன. ஜீலந்தியா கண்டமானது நியூசிலாந்துக்கு அருகே உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய கண்டத்தின் 94 சதவீத பகுதி நீருக்கு அடியில் மூழ்கியுள்ளது. ஒட்டு மொத்தமாக 49 லட்சம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்டதாக இந்த கண்டம் அமைந்துள்ளது.

புதிய கண்டம் மடகாஸ்கர் தீவை காட்டிலும் 6 மடங்கு பெரியது எனவும் இதனுடன் சேர்த்து உலகில் மொத்தம் 8 கண்டங்கள் இருப்பதாக புவியியல் ஆய்வு விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20
08
1963

மறைவு
29
09
2022

## அமரர். சிவசக்தி சிறிகாந்தராசா

(திதி- பூர்வ பக்க புரட்டாதி மாத வளர்பிறை சதுர்த்தி)

உள்ளத்தில் உறைந்திருக்கும் சக்தி...
இல்லத்தில் குலதெய்வமாய் குடியிருக்கும் சிவசக்தி...

வழிகாட்டி நின்ற தெய்வம்...
வானுயர்ந்த தெய்வமாகி வருடம் ஒன்று...
அம்மா....
உங்கள் வழித்தடத்தில் வாழ்ந்திருவோம்...
சாந்தியாய் உறங்கிடும்மா...

(சி-7344)

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

கணவர்-சிறிகாந்தராசா.க (லண்டன்)
பிள்ளைகள்- கஜந்தன்.சி, சிறீவரதன்.சி, கிரிசாந்தன்.சி, சுஜீக்கா.சி

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 450 | 500 |
| தக்காளி | 180 | 150 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 180 | 200 |
| கோவா | 160 | 120 | 150 | 150 |
| கரட் | 250 | 230 | 250 | 250 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 80 | 80 | 100 | 150 |
| வாழைக்காய் | 200 | 180 | 180 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 500 |
| வெண்டக்காய் | 100 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 160 | 200 |
| பயற்றங்காய் | 150 | 100 | 160 | 200 |
| லீக்ஸ் | 160 | 130 | 150 | 150 |
| பீற்றூட் | 150 | 120 | 180 | 160 |
| கறிமிளகாய் | 300 | 350 | 280 | 350 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 150 | 150 |
| போஞ்சி | 400 | 450 | 450 | 450 |
| கத்தரிதம்புள்ள | 160 | 100 | 150 | 150 |
| கீரை – 1 பிடி | 80 | 70 | 60 | 80 |
| தேசிக்காய் | 1000 | 1200 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 500 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 300 | 300 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 160 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 80 | 60 | 120 |

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2925

நித்தியன்




சிதுசன்




சஞ்சய்





சாமந்தி




சிவரதி




அபிலாசினி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிலைக்கேணியில் சட்டவிரோதமாக கடல் அட்டை பிடித்த மூவர் கைது



(அராலி)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் இரவு நேரத்தில் சட்டவிரோதமாக கடல்அட்டைகளை பிடித்த மூவர் வெற்றிலைக்கேணி கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.கைது செய்யப்பட்ட மூவரும் மன்னாரைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக உடைமைகளுடன் மூவரும் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக வடமராட்சி கிழக்கு கடற் பகுதிகளில் இரவு நேரத்தில் பல படகுகள் சட்டவிரோதமாக அட்டை பிடிப்பதாக கடற்படையினரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (5-6-104)

# வடமாகாண சுற்றுலா தின நிகழ்வு யாழில் இன்று

(அராலி)

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு வடமாகாண சுற்றுலா தின நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை யாழில் இடம்பெற உள்ளதாக வடமாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் அ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், செப்டெம்பர் 27ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பினால் உலக சுற்றுலா தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு 1980 ஆம் ஆண்டில் இருந்து வருடாந்தம் இடம்பெற்று வருகின்றது.

வடக்கு மாகாணத்தில் கடந்த 5 ஆண்டுகளாக இந்த உலக சுற்றுலா தினம் அனுஷ்டிக்கப்படவில்லை, காரணம் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலை, கொரோனா தொற்றினுடைய தாக்கம் என்பவற்றினால் வடக்கு மாகாண சுற்றுலா பணியகத்தினால் இதனை நடத்த முடியவில்லை. எனவே இந்த ஆண்டு நாங்கள் இதை சிறப்பான முறையில் யாழ். கலாசார மத்திய நிலையத்தின் வெளிப்புறத்தில் காலை 9 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை சிறப்பான விதத்தில் பல்வேறு கலை நிகழ்வுகள், காட்சிக் கூடங்கள் போன்றன இடம் பெறவுள்ளன. (5-6-104)

# தென்இந்திய திரையுலகில் கால்பதித்த ஈழத்து இளைஞன்



(யாழ்ப்பாணம்)

ராகவா லோரன்ஸ், எஸ்.ஜே.சூர்யா நடிப்பில் கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் தீபாவளிக்கு வெளியாகவுள்ள "ஜிகர்தாண்டா டபிள் எக்ஸ்" படத்தில் இலங்கை கலைஞரான பூவன் மதீசன் பாடல் எழுதியிருப்பதாக இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் தெரிவித்துள்ளார்.

யாழில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு மற்றும் கலைஞர்களுடனான சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

குறித்த படத்தில் யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய காட்சி இருப்பதாகவும் அதனை அருமையாக இயக்குநர் கையாண்டிருப்பதாகவும் தெரிவித்த சந்தோஷ் நாராயணன், அதற்கேற்றது போல யாழ்ப்பாணத்தமிழில் ஒரு பாடலை உருவாக்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

குறித்த பாடலையே நம் நாட்டு பாடகர், பாடலாசிரியர், இசையமைப்பாளர் என பன்முகங்களைக்கொண்ட கலைஞர் பூவன் மதீசன் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6-33)

## சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்.வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான சங்கடஹர சதுர்த்தி உற்சவம் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு அபிஷேகம், மூல மூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திரு வீதிவலம் வருவார் என பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (5-6)

## வெந்து தணிந்தது நாடகநூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மா. ரூபவதன் எழுதிய வெந்து தணிந்தது நாடக நூல் அறிமுக அரங்கு விழா நளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இணுவில் அறிவாலய கோவில் வீதியில் பேராதனைப் பல்கலைக் கழக தகைசால் வாழ்நாட் பேராசிரியர். வ.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து கொள்ளவுள்ளார். (5-6)

# மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தீயணைப்பு சேவை ஆரம்பம்


(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர தீயணைப்புச் சேவையின் பிரதான தீயணைப்பு வாகனத்தில் அவசர திருத்த வேலை காரணமாக நேற்று முன்தினம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட தீயணைப்புச் சேவையானது அவசர தேவைகளுக்காக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இன்று வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகும் என்ன மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)



கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் அமைந்துள்ள அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் சிறுவர் சந்தை நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது. (படம்-தேவானந்தன்)

# வவுனியாவில் இடம்பெற்ற பனைசார் உற்பத்திக்கண்காட்சி



(குருமன்காடு)

வவுனியாவில் பனைசார் பொருட்கள் உற்பத்தி கண்காட்சி நேற்று இடம்பெற்றது.

பனை அபிவிருத்தி சபையின் அனுசரணையோடு வவுனியாவில் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு பனைசார் பொருட்கள் உற்பத்தி பயிற்சி நடைபெற்றிருந்தது.

இக் கண்காட்சி நெளுக் குளத்தில் உள்ள பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றிருந்தது டன், இந்நிகழ்வில் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் கிருஷாந்த பத்திராஜ கலந்து கொண்டிருந்தார்.

இதன் போது மரநடுகை மற்றும் பனம் விதை, நாற்று நடுகை போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6-250)

# சுயதொழிலுக்கு விண்ணப்பித்த பயனாளிகளுக்கு அனுமதியளிப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி பேருந்து நிலைய வளாகத்தில் விற்பனை நிலையங்கள் அமைத்து சுயதொழில் செய்ய விண்ணப்பம் செய்த சுமார் இருபது பயனாளர்களுக்கு ஐந்து வருட குத்தகை அடிப்படையில் கடைத் தொகுதிகள் வழங்க அமைச்சர் -டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கோரிக்கை நீண்டகாலமாக புதிதாக பேருந்து நிலையம் கட்டப்பட்ட காலத்திலிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை அதற்குத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. (5-6)

கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியில் அடைவுமட்டம் குறைந்த சாதாரண தர மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்கில் விசேட காலை வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த நிகழ்வு கல்லூரி அதிபர் திருமதி.சூரியகுமாரி தலைமையில் இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர்

295





என்னைத் தொடர்ந்து தீவுக்குள் வரக்கூடாது. கரையில் படகைப் பார்த்துக் கொண்டு காத்திருப்பதாகச் சத்தியம் செய்து கொடுத்தால் நான் போய் விசாரித்துக் கொண்டு வந்து சொல்வேன்."

"சரி, அப்படியே ஆகட்டும்" என்றான் வல்லவரையன்.

காற்று சுகமாக அடித்தது. பாய் மரத்தின் உதவியினால் படகு விர்ரென்று கடலைக் கிழித்துக்கொண்டு சென்றது. கடலின் ஓங்கார நாதம் கேட்டுக் கொண்டே இருந்தது.

வந்தியத்தேவனுடைய கண்களைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் வந்தது. விழிப்பு நிலையிலிருந்து உறக்க நிலைக்கு இலேசாக நழுவிச் சென்றான்.

### ஒன்பதாம் அத்தியாயம் - "இது இலங்கை"

மறுபடியும் வந்தியத்தேவன் கண் விழித்தபோது, அவன் எதிரேயும் சுற்றிலும் தோன்றிய காட்சி அவனைப் பிரமிக்கச் செய்தது. கிழக்கே வானமுகட்டில் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தான். அங்கே கடல் உருக்கிவிட்ட தங்கக் கடலாகித் தகதக வென்று திகழ்ந்தது. உதய குமாரி தங்கப் பட்டாடை புனைந்து கொண்டு ஜொலித்தாள். அவனுக்கு எதிரே படகு போய்க் கொண்டிருந்த திசையில் ஒரு மரகதத் தீவு நீலக் கடலாடை போர்த்துக் கொண்டு விளங்கியது. வலப் புறத்தில் அதே மாதிரி இன்னொரு பச்சை வர்ண பூமிப் பிரதேசம் காணப்பட்டது. அது நாலு புறமும் கடல் சூழ்ந்த தீவா அல்லது நீண்டு பரந்து வியாபித்துள்ள பூமிப் பிரதேசமா என்று நன்றாகத் தெரியவில்லை. இரண்டு மரகதப் பிரதேசங்களுக்கும் ஊடே பார்த்தால் தூரத்தில் அத்தகைய இன்னும் பல தீவுகள் பச்சை நிறத்தின் பல்வேறு வகைக் கலவைகளுக்கு உதாரணமாகத் தோன்றிக் கொண்டிருந்தன. படகிலிருந்தபடியே நாலுபுறமும் சுற்றிப் பார்த்தால் வானவில்லின் ஏழுவித வர்ணங்களும் அதன் ஏழாயிரம் வகைக் கலவை நிறங்களும் திகழ்ந்தன. மொத்தத்தில் அந்தக் காட்சி கண்ணெதிரே காணும் உண்மைக் காட்சியாகவே தோன்றவில்லை. ஓவியக் கலையில் தேர்ந்த அமர கலைஞன் ஒருவன், "இதோ சொர்க்கலோகம் எப்படியிருக்கும் என்று காட்டுகிறேன்" என்று சபதம் பூண்டு தீட்டிய வர்ணச் சித்திர அற்புதம் போலவே தோன்றியது.

இந்தக் காட்சியைக் கண்டு மெய்மறந்து நினைவிழந்திருந்த வந்தியத்தேவனுடைய செவியில், "இது சொர்க்கம் அல்ல. இது இலங்கை" என்ற வார்த்தைகள் விழுந்து அவனை விழிப்படையச் செய்தன.

"ஆம்! இது சொர்க்கமோ என்று நான் சந்தேகித்தது உண்மைதான்" என்றான் வந்தியத்தேவன்.

"இது சொர்க்க பூமி அல்ல. ஆனால் சொர்க்கம் போன்று பூமி. இந்த சொர்க்கத்தை நரகமாக்குவதற்கு மனித உருக்கொண்ட அசுரர்கள் வெகு காலமாகப் பிரயத்தனப்பட்டு வருகிறார்கள்" என்றாள் பூங்குழலி.

"யாரை அசுரர்கள் என்று சொல்லுகிறாய்?" என்றான்.

"உன்னைப் போல் யுத்தமே தொழிலாகக் கொண்டவர்களைத்தான்."

(தொடரும்...)

அதாவது உன்னைப் போன்ற தைரியசாலிகள். கொள்ளிவாய்ப் பிசாசுக்குப் பயப்படாதவள் அல்லவா நீ? சரி பூதத் தீவைப்பற்றி என்ன சொல்ல வந்தாய்?"

"பூதத் தீவின் கரையில் ஒரு நாழிகை நேரம் நீ தாமதித்தால் பொன்னியின் செல்வர் இப்போது இலங்கையில் எங்கே இருக்கிறார் என்று விசாரித்துச் சொல்வேன்"

"பூதத் தீவில் யாரை விசாரிப்பாய்?"

"பூதத் தீவில் ஒரு பூதம் இருக்கிறது. அதை விசாரிப்பேன்."

"அந்தப் பூதத்தை எனக்கும் காட்டுவாயல்லவா?"

"அதுதான் முடியாது. நீ



# சிறுவர் அரங்கம்

## எங்க ஏரியா உள்ள வராதே

(நேற்றைய தொடர்ச்சி)

"ஐயா! நீங்க ஒரு சின்ன விலங்குகிட்ட பேசுனதே பெரிய விஷயம் அவங்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்காதீங்க. நாம இதுக்கு ஒத்துக்க கூடாது" என்றது ஒரு யானை.

"நேரம் வரும் போது அவங்க உதவி நமக்கு தேவை. நாளையிலிருந்து நாம வேறு வழியா தான் போகணும்" என்று ராஜா யானை தன் கூட்டத்திடம் சொன்னது.

யானைகள் ராஜா சொன்னது போல அடுத்த நாள் வேற வழியாக தண்ணீர் குடிக்க போனார்கள். தண்ணீர் குடித்து விளையாடி ரொம்ப



ஜாலியா இருந்தாங்க. ஆனா அந்த சந்தோஷம் ரொம்ப நாள் நீடிக்கவில்லை.

ஒருநாள் யானைகள் நதியில் விளையாடிட்டு இருக்கும் போது சில வேட்டைக்காரர்கள் யானையை வேட்டையாட நினைச்சாங்க. அடுத்தநாள் வழக்கம்போல யானைகள் நதிக்கு போய்க் கொண்டிருக்கும் போது திடீரென சில யானைகள் வேட்டைக்காரர்கள் வைத்திருந்த கயிறு பொறிக்குள் மாட்டிக்கொண்டாங்க.

ராஜா யானையும் அதில் மாட்டி இருந்தார்.

அவர் மற்ற யானையிடம் "எல்லாரும் உடனே எலிகள் தங்கி இருக்கும் இடத்துக்கு போறாங்க [illegible] ததை சொல்லுங்க.

அந்த வேட்டைக்காரங்க திரும்பி வருவதற்குள் நமக்கு உதவி செய்ய சொல்லுங்க" என்றது. உடனே யானைகள் எலிகள் கிட்ட போய் நடந்ததை சொன்னாங்க.

அவங்க சொன்னதை கேட்டதும் யானைகள் மாட்டிய இடத்துக்கு எலிகள் வந்தன. வேகவேகமா கயிறை கடிக்க தொடங்கினாங்க. வேட்டைக்காரர்கள் வருவதற்குள் யானைகளை காப்பாற்றினாங்க.

யானை ராஜா எலிகள் கிட்ட தன் நன்றியை சொன்னார். எலிகளை ஏளனமாக பார்த்த மற்ற யானைகளில் ஒருவர் எவ்வளவு சின்னதாக இருந்தாலும் நாம அவர்களை குறைவாக பார்க்கக் கூடாது என்று உணர்ந்து கொண்டார்கள்.

அன்று முதல் எலிகளும் யானைகளும் நண்பர்களாக பழகி வந்தார்கள்.

மனிதர்கள் தான் விலங்குகளை வேட்டையாட துடிக்கிறாங்க.

அதனால நிறைய விலங்கினங்கள் அழிவுக்கு வந்திருக்கு. விலங்குகள் அதற்கான தேவைகளை அதுவே பாத்துக்கும்.

மனிதர்களான நாம அதற்கு வழிவிட்டா போதும். மேலும் யாரையும் எப்பவும் நமக்கு கீழ வைத்து பார்க்கக் கூடாது. சமமாக நடத்தணும். அப்போதான் யானை ராஜா மாதிரி உங்களுக்கும் நன்மை நடக்கும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவராய் இருப்பது நல்லதுதான். ஆனால் நல்லது, கெட்டது தெரியாத நல்லவராய் இருப்பது ஆபத்தானது. – பெர்னாட்ஷா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இரப்பது பிச்சை கட்டுவது விகாரை

ஒரு காலத்தில் மாதன முத்தாவின் கதையைப் படித்தபோது இது கற்பனையாக இருக்கும் என்று நினைத்ததுண்டு.

ஆனால் பௌத்த துறவிகளின் செயற்பாடுகளைப் பார்க்கும்போது உண்மையாகவே மாதன முத்தா இருந்திருப்பார் என்று எண்ணத் தோன்றுகிறது.

அந்தளவுக்கு பௌத்த துறவிகளில் கணிசமானவர்கள் மாதன முத்தாக்களாக இருப்பதைக் காண முடியும்.

ஆம், தன் நாட்டு மக்களை கொன்றொழிப்பதற்காக உள்நாட்டில் போர் நடத்திய இலங்கையின் பொருளாதாரம் இப்போது அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கிறது.

இதற்கும் மேலாக, ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் எஞ்சியதைச் சூறையாட நாடு கந்தறந்து போயிற்று.

நாட்டின் பொருளாதார நிலைமை படுமோசமாகிய நிலையில் சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) சரணாகதியடைய வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு ஏற்பட்டது.

எனினும் பொருளாதாரத்தில் இன்னமும் ஸ்திரத்தன்மை ஏற்படாத நிலை காரணமாக தொடர்ந்தும் இலங்கைக்கு உதவுவதற்கு சர்வதேச நாணய நிதியம் பின்னடித்து வருகிறது.

இஃது ஒருபுறமிருக்க, வெளிநாட்டு நாணயத்தை ஈட்டும் பொருட்டு வெளிநாடுகளில் வேலை செய்வதற்கு வசதியாக அரச உத்தியோத்தர்களுக்கு ஐந்து ஆண்டு கால விடுமுறை வழங்க, இதுதான் சந்தர்ப்பம் எனப் பார்த்திருந்த அரச உத்தியோகத்தர்களில் கணிசமானவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டனர்.

இதையும் கடந்து மருத்துவ நிபுணர்கள் உள்ளிட்ட துறைசார் நிபுணத்துவமுடையவர்களும் வெளிநாடுகளை நோக்கிப் படை எடுக்கத் தொடங்கி விட்டனர்.

கூடவே படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் தற்போதைய சூழ்நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர்.

இதுதான் என்றால் இல்லை. ஏலவே வீட்டுப் பணி மற்றும் கட்டுமானப் பணிகளின் பொருட்டு பெண்களும் ஆண்களும் மத்திய கிழக்கு நாடுகளுக்குச்சென்று அங்கு ஓய்வு உறக்கமின்றி வேலை செய்கின்றனர்.

என்ன செய்வது தங்களின் குடும்ப கஷ்டம் தீர வேண்டும் என்பதற்காக இவ்வாறு வெளிநாடுகளில் நம்மவர்கள் கஷ்டப்பட, இங்கோ பௌத்த துறவிகள் திருகோணமலையில் இரவோடு இரவாக விகாரை கட்டும் பணியில் ஈடுபடுகின்றனர்.

என்ன செய்வது எண்பது சதவீதமான இளைஞர்கள் வெளிநாடு செல்கின்றனர் என களனிப் பல்கலைக்கழகத்தின் ஆய்வறிக்கை சுட்டி நிற்க,

இங்கு பௌத்த விகாரைகளைக் கட்டி பிரித்தோதுவதற்கு காவிகள் கங்கணம் கட்டி நிற்கின்றனர் என்றால், இதைவிட்ட துன்பம் வேறு என்னவாக இருக்க முடியும்.

ஆம், இலங்கை அரசு உலகம் எல்லாம் சென்று பிச்சை எடுக்கின்றபோது அந்தப் பிச்சையில் பௌத்த விகாரைகள் கட்டப்படுகின்றனவென்றால், இந்த யுகத்தில் இந்த நாடு உருப்படுமா என்ன?

## காலநிலை மாற்றங்களை வெற்றிகொள்ள இலங்கைக்கு 26 பில்லியன் டொலர்கள் தேவை

### உலக நாடுகளிடம் ரணில் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் காலநிலை செழிப்பு திட்டத்தை வெற்றியடைய செய்ய 2030 ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு 26.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

'பேர்லின் குளோபல் உரையாடலில்' கலந்து கொள்ள நான்கு நாள். பயணமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் ஜேர்மன் நோக்கி புறப்பட்டிருந்தார்.

நேற்றைய தினம் மாநாட்டில் உலகத் தலைவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

'பேர்லின் குளோபல் உரையாடலில்' உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கையில் காலநிலை மாற்றத்தைக் குறைத்தல் மற்றும் கடன் மறுசீரமைப்பு ஆகிய இரண்டு பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. குறைந்த பட்ச நிதியைக் கொண்டு நாம் இந்த விடயங்களை கையாள வேண்டியுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார். (ம-7)

## பாவனைக்குதவாத மீன்களை நாட்டுக்குள் அனுமதித்த சுங்கத்துறை

### கணக்காய்வு அலுவலக அறிக்கை மூலம் வெளிக்கொணர்வு

கொழும்பு துறைமுகத்திற்கு வந்த கப்பலில் சேதமடைந்து துர்நாற்றம் வீசிய பாவனைக்கு தகுதியற்ற 102 கொள்கலன் சூரை மீன்களை இலங்கை சுங்கத்துறை நாட்டினுள் அனுமதித்துள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீள் ஏற்றுமதி செய்யுமாறு இலங்கை சுங்கத்துறை கப்பல் முகவருக்கு அறிவிக்காமல் அதனை மீறி நாட்டினுள் அனுமதித்துள்ளதாக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஷீ ஷெல்ஸில் இருந்து தாய்லாந்து நோக்கி பயணித்த கொள்கலன் கப்பலொன்றின் மூலம் இந்த மீன்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி 13ஆம் திகதி, கொழும்பு துறைமுகத்திற்கு அருகிலுள்ள கடற்பகுதியில் சி.எம்.ஏ கைலாஸ் என்ற கப்பலின் இயந்திரக் கோளாறு காரணமாக 20 நாட்களுக்கு மின்சாரம் நிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு துறைமுகத்திற்கு அறிவித்த பின்னர், துறைமுக அதிகாரிகள் ஜெனரேட்டர்கள் மற்றும் இழுவைப் படகுகளைப் பயன்படுத்தினர்.

கடல் எல்லையில் நிறுத்தி இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக தணிக்கை அறிக்கை தெரிவித்துள்ளது.

இந்த வகை மீன்கள் கெட்டுப்போனதாக தெரிவிக்கப்பட்ட போதிலும், இது முழு சூரை மீன் என சுங்கப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு 62 இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான வரிகள் அறவிடப்பட்டுள்ளதாகவும் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்படாவிடின் இலங்கைத் துறைமுகத்தில் பொருட்களை இறக்க முடியாது என கணக்காய்வு அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை சுங்கத்தின் 2022 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் இந்த தகவல் குறிப்பிடப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (ம-7)

## தொழில்புரியும் பெண்கள் அதிகளவில் புற்றுநோய்க்கிலக்கு

இலங்கையில் பணிபுரியும் பெண்கள் புற்றுநோயால் அதிகம் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்திற்கான சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் இஷானி பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார்.

45 முதல் 65 வயது வரையிலான பெண்கள் ஆபத்தில் உள்ளனர் என்றும் அத்துடன் பணிபுரியும் பெண்கள் மிகக் குறைந்த மட்டத்திலேயே சோதனைக்கு செல்வதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் இந்த நிலைமை மோசமாகியுள்ளதாகவும் பதிவாகியுள்ள புற்றுநோயாளிகளில் 26 பேர் மார்பகப் புற்றுநோயாளிகளாக இருப்பதாக தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ம-7)

### நற்பெயருக்கு கலங்கம்

## சமூக் செயற்பாட்டாளரிடம் 50 கோடி கோரிய விஜயதாச

(கொழும்பு)

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தனது நற்பெயருக்கு ஏற்பட்ட சேதத்திற்காக 500 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்குமாறு சமூக ஊடக செயல்பாட்டாளர் கீர்த்த ரத்நாயக்க என்பவருக்கு நட்டஈடு கோரிய கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

கீர்த்தி ரத்நாயக்கவினால் பராமரிக்கப்படும் சமூக ஊடகக் கணக்கில் வெளியிடப்பட்ட தவறான செய்திகளால் தனது நற்பெயருக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக விஜயதாச ராஜபக்ஷ குறித்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார். மேலும், தொகையை செலுத்தாவிட்டால், இரண்டு வாரங்களின் பின்னர் வழக்கு தொடரப்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## மரம் முறிந்ததில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு முன்பாக பாரிய மரம் முறிந்து வீழ்ந்ததில் ஒருவர் காயமடைந்து தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளார்.

இச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்று உள்ளதாகத் தெரிய வருகிறது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவுதாவது.

யாழ் பொது நூலகத்திற்கு முன்னாலுள்ள யாழ் மாநகர சபையின் சிறுவர் பூங்காவில் பாரிய பல மரங்கள் காணப்படுகின்றன.

இந்த பூங்காவிற்குள் இருக்கின்ற மரங்களின் கீழ் வீதியால் செல்கின்ற பொது மக்களும் வாகனங்களுடன் அந்த வாகனங்களின் சாரதிகள் பலரும் நிழலுக்காக தரித்து நிற்பது வழமை.

இந்த நிலையில் நேற்றைய தினமும் குறித்த மரத்தின் நிழற் பகுதியில் நிழலுக்காக ஆட்டோவில் அதன் சாரதியும் தங்கி நின்றிருந்தார்.

அப்போது அடித்த பலமான காற்றினால் நீண்ட கால பாரிய மரமொன்று அங்கு நின்றிருந்த ஆட்டோவின் மேல் முறிந்து வீழ்ந்ததில் ஆட்டோ முழுவதும் சேத மடைந்ததுடன் அதன் சாரதி காயங்களுடன் தப்பியுள்ளார். (ம-7)

## தபால் சேவைக்கு புதிய அதிகாரிகள்

(கொழும்பு)

133 தொழில்நுட்பம் அல்லாத கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் சேவை தர தபால் சேவை அதிகாரிகள் மற்றும் 26 ஆரம்ப உத்தியோக தர தபாற்சேவை சாரதிகளுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு பதில் ஊடகத்துறை அமைச்சர் சாந்த பண்டாரவின் தலைமையில் நேற்று முன்தினம் தபால் தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் அமைச்சர் சாந்த பண்டார மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெலப்பிட்ட ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா-இந்தியா உறவில் விரிசல் பின்னணி பற்றி ஒரு தொகுப்பு



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்விநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

03

இதுதவிர, இரும்பு, எஃகுபொருட்கள், மருத்துவபொருட்கள், காய்கறிகள், பதப்படுத்தப்பட்டமீன், கோழி உள்ளிட்ட இறைச்சிகளும் தமிழ் நாட்டில் இருந்து கனடாவுக்கு ஏற்றுமதியாகின்றன. இவ்வாறு பி.பி.சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

### சீக்கியம் பற்றி சிலவரிகள்

சீக்கியம் அல்லது சீக் (சீக்கியர், என்ற சொல்லுக்கு "சீடர்", அல்லது "கற்பவர்" என்று பொருள்படும்) என்பது இந்தியத் துணைக் கண்டத்தின் பஞ்சாப் பகுதியில் 15 ஆம் நூற்றாண்டின் முடிவில் தோன்றிய தர்ம சமயமாகும். உலகில் உள்ள முதன்மை சமயங்களில் இளைய சமயங்களில் இதுவும் ஒன்றாகும். சீக்கிய சமயத்தின் அடிப்படையான நம்பிக்கைகள், குருகிரந்த்சாஹிப நூலில் உள்ளன. மனித குலத்தின் ஒற்றுமை, தன்னலமற்ற சேவையில் ஈடுபடுவது, அனைவரின் நலனுக்கும் சமூக நீதிக்காக போராடுவது மற்றும் நேர்மையான நடத்தை ஆகியவற்றை பொதுவாக வலியுறுத்துகிறது. இது ஓரிறைக் கொள்கையை உடைய சமயமாக பஞ்சாப் பகுதியில் வாழ்ந்த குருநானக் (GuruNanak) அவர்களால் 15ம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்ட சமயமாகும். இச்சமயம் குருநானக்கிற்குப் பிறகு தோன்றிய பத்து சீக்கிய குருக்களாலும் முன்னேற்றப்பட்டது. இது சுமார் 30 மில்லியன் சீக்கியர்களைக் கொண்டு உலகின் ஐந்தாவது பெரிய சமயமாக உள்ளது. முதல் நான்கு மதங்களாக முறையே கிறிஸ்தவம், இஸ்லாம், இந்து, பௌத்தம் போன்ற மதங்கள் இருக்கின்றன.

சீக்கிய சமயம் சிம்ரனை (குருகிரந்தசா்கிப் பின்வார்த்தைகளில் தியானம்) வலியுறுத்துகிறது. இது கீர்த்தனையோ அல்லது உள் மனதில் உச்சாடனை (கடவுளுடைய பெயரை மீண்டும் மீண்டும் சொல்லுதல்) செய்வதன் மூலம் கடவுளுடைய பிரசன்னத்தை உணரும் வழிமுறை என்கிறது. மேலும் "ஐந்துதிருடர்களான" (காமம், ஆத்திரம், பேராசை, பற்று, அகந்தை) ஆகியவற்றைக் கட்டுப்படுத்தி, மதச்சார்பற்ற வா்ழ்க்கையை ஆன்மிக வாழ்வோடு கைகோர்த்து பிணைக்கப்பட வேண்டும் என்கிறது. குருநானக் கற்பித்தவை "செயலில், ஆக்கபூர்வமான, நடைமுறைவாழ்க்கை" அதில் "உண்மை, விசுவாசம், சுயகட்டுப்பாடு, தூய்மை". மேலும் சிறந்த மனிதர் என்பவர் "கடவுளோடு ஒன்றிணைந்து, அவருடைய விருப்பத்தை அறிந்து, அதைத் தொடருவார்" என்று கூறுகிறார்.

குருநானக் தேவ் மற்றும் அவரது வழித் தோன்றல்களின் போதனைகளே சீக்கிய சமயத்தின் மூலமாகும். சீக்கியர்களின் முதல் குருவான குருநானக்தனது 30 ஆம் வயதில் அறிவு விளக்கம் பெற்ற பிறகு, யாருடைய பாதையை நான் பின்பற்ற வேண்டும். இந்து மதமா அல்லது முஸ்லிமா, நான் கடவுளின் பாதையை பின்பற்ற வேண்டும். கடவுள் இந்து மதமும் அல்ல, முஸ்லிம் மதமும் அல்ல. நான் பின்பற்ற வேண்டிய பாதை கடவுளின் பாதையாகும் என்று மக்களிடையே கூறினார். பின் அவர் தன் கருத்துக்களை பயணங்கள் செய்து மக்களிடையே கொண்டு சேர்த்தார். இவருக்குப் பின் தோன்றிய சீக்கிய குருக்கள் சீக்கியத்தினை மேம்படுத்தினர்.

சீக்கியம் அனைத்து மனிதர்களும் சமத்துவமானவர்கள் என்ற கொள்கையை வலியுறுத்துகிறது. அத்துடன் சாதி, சமயம், பாலினம் போன்ற பாகுபாடுகளை நிராகரித்து இறைவனை அடைவதற்கான வழிமுறைகள்ளைக் கூறுகிறது.

சீக்கியத்தின் கொள்கையை முதலில் மொழிந்தவரான குருநானக்கு இந்து நூல்கள், குர்ரான் இரண்டிலுமே உண்மைகள் இருக்கின்றன எனவும் இரண்டையும் சேர்த்தே மக்கள் பின்பற்றலாம் எனவும் கூறினார். இந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒற்றுமையாக வாழ வைப்பதே தன் நோக்கம் எனக் கூறினார். இராமன், கிருஷ்ணன், நபிகள் போன்றவர்கள் அனைவரும் இறைவனின் தூதர்கள் எனவும் உலக வாழ்க்கையைத் துறந்த துறவியையும் மனையறம் பூண்ட மக்களையும் கடவுள் ஒன்றாகவே பாவிப்பார் எனவும் கூறினார்.

குரு என்ற சொல்லானது சமஸ்கிருதத்தின் குரு என்ற சொல்லிருந்து தோன்றியதாகும். இச்சொல்லானது ஆசிரியர், வழிகாட்டுனர் மற்றும் அறிவுரையாளர் என்று பொருள் தருவதாகும். கி.பி. 1469 முதல் 1708 வரையில் சீக்கியத்தின் மரபுகள் மற்றும் தத்துவங்கள் பத்து குருக்களால் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு குருவும் சீக்கிய மதத்தின் கோட்பாடுகளினை வரையரை செய்து அதன் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தனர். சீக்கிய சமயத்தினை தோற்றுவித்த குருநானக் முதல் குருவாவர். அவருக்குப் பின் ஒன்பது குருக்கள் தோன்றினர். பத்தாவது குருவான கோவிந்தசிங் தனக்குப் பின்குருவாக சீக்கிய குருக்களின் போதனைகளை எழுத்து வடிவமாக தொகுக்கப்பட்ட நூலினை அறிவித்தார். அதனால் குருகிரந்த்சாகிப் என்று அழைக்கப்படும் அந்நூலானது பதினோராவது குருவாக சீக்கியர்களால் மதிக்கப்படுகிறது. இந்நூல் சீக்கியர்களுக்கான ஆன்மிக வழிகாட்டியாக வேதவாக்காக, தனித்துவமான குருவின் நேரடி உருவகமாக மாறியது.

### சீக்கிய அடையாளங்கள்

சீக்கிய சமயத்தின் பத்தாவது குருவான குரு கோவிந்த்சிங் 1699 ஆம்ஆண்டில் பைசக்தி நாளில் அமிரித்சன்ஸ்கரில், எல்லா தீட்சை பெற்ற சீக்கியர்களும் (கால்சா சீக்கியம் என்றும் அழைக்கப்படுகிறது) நம்பிக்கையின் அடையாளமாக ஐந்து பொருட்களை எல்லா நேரங்களிலும் அணிய வேண்டும் என்று கட்டளையிட்டார். இதை "ஐந்துகே"க்கள் அல்லது "பஞ்சகாக்கர்/காக்கி" என்று சொல்கிறார்கள்.

### இந்த ஐந்து சின்னங்களாவன

1. கேஷ் (வெட்டப்படாத முடி, இதை பொதுவாக சுருட்டி சீக்கிய தலைப்பாகையான, டாஸ்டர் என்பதன் உள்ளே வைக்கப்படும்.)

2. கங்கா (மரத்தாலான சீப்பு, பொதுவாக தலைப்பாகையின் கீழ் அணியப்படும்.)

3. கச்சாஹெறா (இடுப்பிலிருந்து முட்டிவரை இருக்கும் ஆடை, வெள்ளை நிறத்திலிருப்பது.)

4. கடா (இரும்பாலானா கை வளையம், இது வெண்கல கைவாளாக போரில் பயன்படக் கூடியது, பெரியவை தலைப்பாகையில் அணியப்பட்டு தூக்கி யெறியக்கூடிய ஆயுதமாக பயன்படுத்தப் படும்.)

5. கிர்ப்பான் (வளைந்த கத்தி)

### சீக்கியர்

சீக்கியர் என்பவர் சீக்கிய மதத்தைப் பின்பற்றுபவர்கள் ஆவர். இந்திய சுதந்திரத்திற்கு முன்பு சீக்கியர்கள் இந்துக்களின் உட்பிரிவாக கருதப்பட்டனர். இருப்பினும் இன்று இந்தியா, கனடா, அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் சீக்கியர்களை தனி மதமாக எண்ணுகின்றன. பெரிய பஞ்சாப் மாகாணம் வரலாற்று ரீதியாக சீக்கிய மதத்தின் பூர்வீக இடமாகும்.

பெரும்பாலான சீக்கியர்கள் பஞ்சாபிகள் ஆவர். அவர்கள் பஞ்சாப் பகுதியிலிருந்து வந்தவர்கள், ஆனாலும் உலகெங்கும் கணிசமான அளவு சமூகங்கள் உள்ளன. பஞ்சாபிகளும் பஞ்சாப் பகுதியும் சீக்கியம் என்பதை ஒரு மதமாக உருவாக்கியதில் வரலாற்றில் மிகமுக்கிய பங்காற்றி உள்ளன. நவம்பர் 11, 1675 இல் டில்லியில் நடந்த மதப்போராட்டம் ஒன்றில் இந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக 9 ஆவது குரு திரு குருதேக் பஹதூர் என்பவர் வீரமரணம் அடைந்தது, அனைவரும் பின்பற்றத்தக்க ஒரு எடுத்துக்காட்டாகும்.

பொதுவாக சீக்கிய மதம், மிதமான அளவு உறவுகளை பிற மதத்தினருடன் கொண்டிருக்கிறது. ஆனாலும் முகாலயர்களின் ஆட்சி காலத்தில் (1556-1707), வளர்ந்து வந்த இந்த மதமானது, ஆட்சியில் இருந்த முகலாயர்களுடனான உறவில் பிணைக்கைச் சந்தித்தது. சில முகலாய மன்னர்கள் சிறுபான்மை மதத்தினரின் உரிமைகளைப் பறிப்பதை எதிர்த்த காரணத்தால் பிரபலமான சீக்கிய குருமார்கள் பலர் முகலாயர்களால் கொல்லப்பட்டனர்.

இதேநேரத்தில், சீக்கிய மதம் முகலாய பேரரசை எதிர்ப்பதற்காக இராணுவத்தை உருவாக்கியது. சீக்கியப் பேரரசு மகாராஜா ரஞ்சித்சிங் என்பவரின் கீழ் உருவாகியது. இது மத சகிப்புத்தன்மை மற்றும் கிறிஸ்தவர்கள், இந்துக்கள் ஆகிய அனைவரையும் அதிகாரத்தில் அமரவைத்ததன் மூலம் பன்மைத்தன்மையையும் பேணி வந்தது. சீக்கிய அரசை நிறுவியது பொதுவாக, சீக்கிய மதத்தை அரசியல் ரீதியாக வெளிக்கொண்டு வருவதற்கான முயற்சி என்று கருதப்படுகிறது. இந்த சீக்கிய அரசாங்கத்தின் கீழ் ஜம்மு, காஷ்மீர், லடாக், மற்றும் பெஷாவர் ஆகியவை அடக்கிவிட்டன. வடமேற்கு எல்லைப் புறத்தில் இருந்த சீக்கிய ராணுவத்தின் தளபதியாக இருந்த ஹரிசிங் நல்வா என்பவர் சீக்கிய அரசாங்கத்தின் எல்லையை கைபர் கணவாயின் தொடக்கம் வரை விரிவாக்கினார். அரசாங்கத்தின் வெளிப்டையான நிர்வாகத்தில் புதுமையான இராணுவம், பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைவுகள் ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டன.

1947ஆம் ஆண்டில் இந்தியாவைப் பிரிப்பதற்கான காலத்தில், பஞ்சாப்பில் சீக்கியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே கடுமையான முரண்பாடு உருவானது. இதனால் மேற்கு பஞ்சாப்பிலிருந்து பல பஞ்சாபி சீக்கியர்கள் மற்றும் இந்துக்கள் இடம் மாறி வந்தனர். இதேபோல் கிழக்கு பஞ்சாபிலிருந்து இதற்கு நேரெதிரான இடப்பெயர்வு நிகழ்ந்தது.

1960களில், பஞ்சாபி சீக்கியர்களுக்கும் இந்துக்களுக்கும் இந்தியாவில் பெரிய அளவிலான சண்டைகளும் முரண்பாடுகளும் நிலவி வந்தது. ஏனெனில் பஞ் சாபி சீக்கியர்கள் பஞ்சாபில் சீக்கிய பெரும்பான்மை மாநிலத்தை உருவாக்க அதிகமாக வலியுறுத்தி வந்தனர். இந்திய சுதந்திரத்தின் போது அரசியல் ரீதியான ஆதரவைத் தந்ததற்காக இவ்வாறு செய்யப்படுவதாக மாஸ்டர் தாரா சிங் என்பவருக்கு நேருவால் உறுதி தரப்பட்டது. நவம்பர் 1, 1966 இல் சீக்கிய பெரும்பான்மை மாநிலமான பஞ்சாபை சீக்கியர்கள் பெற்றனர்.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல்...

சேர்ந்த அமிர்தலிங்கம் செல்வராசா (வயது-71) என்பவரே சடலமாக மீட்கப் பட்டவராவார்.

கடந்த 24ஆம் திகதி வீட்டில் இருந்து குறித்த நபர் வெளியே சென்ற நிலையில், அவர் காணாமல் போனதாக அவரது உறவினர்களால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று உடுவில் பகுதியில் உள்ள காணி ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது குறித்து சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## வாகன இறக்கு...

பதில் நிதி அமைச்சர் செஹான் சேம சிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த பதில் அமைச்சர்,

அடுத்த வருடம் பெப்ரவரி மாதத் திற்கு முன்பாக நாட்டின் பல்வேறு பொருட்கள் மீது விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி தடை நீக்கப்படும். அதே நேரம் பொதுப்போக்குவரத்துக்கான வாகனங்கள் மீதான இறக்குமதி கட் டுப்பாடு அவசியம் என்றும் மற்றைய வாகனங்கள்மீதான இறக்குமதிதடையை நீக்கும் எண்ணம் தற்போதைக்கு இல்லை என்றும் சுட்டிக்காட்டினார். (ம-7)

## குடும்பஸ்தர்...

ஜெனிஷ்குமார் (வயது-28) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற் கொண்டார். (ம-7,60)

## வரலாற்றுப்...

போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் அங்கு கருத்துரைக் கையில்,

"நிலை பேண்தகு அபிவிருத்தியை யும் பொருளாதார வளர்ச்சியையும் அடைந்து கொள்ள இலங்கை மிகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரு கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கையின் பிரகாரம் பல்வேறு மறு சீரமைப்புகளை இலங்கை மேற் கொண்டுள்ளதுடன், மேலும் பல கோரிக்கைகளையும் நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கமும் அதன் பிரதிநிதிகளும் இந்த விடயத்தை வெற்றி கொள்ள முழுமையாக தம்மை அர்ப்பணித்து பணியாற்றுவதையும் நான் அறிவேன்.

அரசாங்கத்தின் அர்ப்பணிப்பின் இலக்கானது நாட்டை மீண்டும் கட்டி யெழுப்புவதுடன், அதற்கான தடை களை நீக்குவதாகும் என்பதையும் அறிவேன்.

பழைய கலாசாரங்களின் பிரகாரம் நாம் ஆரம்பித்த அதே இடத்திற்கு மீண்டும் செல்வது அல்ல இலக்காக இருக்க வேண்டியது.

இலங்கை இன்னமும் நெருக்கடி யில் இருந்து மீளவில்லை. அதுதான் நாம் வெற்றிகொள்ள வேண்டிய இலக்கு.

அமைவிடத்தின் ஊடாக இலங்கை தெற்காசியாவில் வளர்ச்சியடைந்த நாடாக மாற முடியும். வரலாற்றில் எதிர் கொண்ட சவால்களின் பாடங்களின் ஊடாக சகலரதும் பங்குபற்றலின் ஊடாக இந்த நெருக்கடியில் இருந்து மீள இதனை ஒரு சந்தர்ப்பமாக மாற் றிக்கொள்ள வேண்டும்" எனவும் அமெ ரிக்க தூதுவர் வலியுறுத்தினார். (ம-7)

## தமிழர்களின்...

நேற்று வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்ற 13வது திருத் தத்தை நடைமுறைப்படுத்துவதற் கான ஏற்பாடுகள் தொடர்பிலான கலந் துரையாடலின் பின்னர் ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் இருப்புக்களை தக்க வைத்துக்கொள்வதற்கு 13ஆவது திருத் தம் செயற்படுத்தப்பட வேண்டும்.

இதனை கருத்தில் கொண்டு மாகாண சபைகளிடமிருந்து மத்திக் குப் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள மாகாணத்துக்கு வழங்குவது தொடர் பிலும் நியதிச் சட்டங்களை உருவாக்கு வது தொடர்பிலும் ஜனாதிபதியுடன் பல சுற்றுச் சந்திப்புக்களை மேற்கொண் டோம்.

நாம் சந்திப்புகளில் ஈடுபட்டபோது ரணில் தமிழ் மக்களுக்கு ஒன்றும் செய்ய மாட்டார் என சிலர் கூறினர். ஆனால் நாங்கள் சில விடயங்களை அவர் ஊடாக செய்விக்கலாம் என்ற நம்பிக்கையுடன் இணைந்து செயற் பட்டு வருகிறோம்.

இறுதியாக இடம்பெற்ற ஜனாதி பதியுடன் கலந்துரையாடலில் பறிக்கப் பட்ட மாகாண அதிகாரங்களை அவ் வாறு மீள வழங்குவது தொடர்பிலும் நியதிச் சட்டங்களை உருவாக்குவது தொடர்பிலும் நிபுணர் குழு ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி சம்மதித் தார்.

ஜனாதிபதி வெளிநாடு சென்ற நிலையில் குறித்த குழுவை நியமிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் அவரின் பொறுப்பை செயல்படுத்துப வர்களும் குழுவை நியமிக்கவில்லை.

13 ஆம் திருத்தம் தொடர்பில் இந்தி யாவும் கரிசனையாக உள்ள நிலை யில் அதனை நடைமுறைப்படுத்து வதற்கு இந்தியாவும் தங்களால் ஆன அழுத்தத்தை வழங்க வேண்டும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிலையான அரசாங்கம் ஒன்றின் ஜனா திபதியாக இல்லாத நிலையில் சில விடயங்களை நடைமுறைப்படுத்து வதற்கு தென் இலங்கையைச் சேர்ந்த சிலர் முட்டுக்கட்டை போடுகிறார்கள்.

அவ்வாறு முட்டுக்கட்டை போடு பவர்களுடன் மாகாண அதிகாரங் களை மாகாணத்திற்கு வழங்குவது தொடர்பில் பேசி இருக்கிறோம் இனி மேலும் பேச உள் ளோம்.

ஆகவே ஜனா திபதி ரணில் விக் கிரமசிங்க தமிழ் மக்களுக்கு செய் வாரா செய்ய மாட் டாரா என்ற விவா தங்களை தாண்டி தமிழ் மக்களின் இருப்புக்களைத் தக்க வைத்துக் கொள்வதற்காக பறிக்கப்பட்ட அதிகாரங்களை யாவது அவர் மூலம் பெறுவதற் குரிய நடவடிக்கை களை தொடர் வோம் என அவர் மேலும் தெரிவித் தார். (ம-7,33,104)

## நீதித்...

அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்ட நீதி மன்ற நீதிபதி சர வணராஜா, தன் மீது தொடர்ச்சி யாகப் பிரயோகிக் கப்பட்டு வந்த அழுத்தங்கள் மற் றும் உயிர் அச் சுறுத்தல்கள் கார ணமாக, தனது பதவியையும், பொறுப்புகளையும் துறந்துள்ளமை, இந்த நாட்டின் நீதித்துறையினது சுயாதீன இயங்கு நிலையை அடி யோடு ஆட்டம் காணச் செய்துள் ளது.

நீதிபதி சர வணராஜா கடந்த 2023.07.04ஆம் திகதி தனது கடமை நிமிர்த்தம் குருந் தூர்மலைக்கு விஜயம் செய்திருந்த போது தெரிவித்த கருத்துகளை மேற் கோள்காட்டி 2023.07.07ஆம் திகதிய பாராளுமன்ற உரையிலும், அதன் பின்னர் பொதுவெளியிலும் முல்லைத் தீவு மாவட்ட நீதிபதியை, பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அவ தூறுக்கு உள்ளாக்கியிருந்தார்.

அதன்பின்னர் குருந்தூர்மலையில் தமிழர்கள் வழிபாடியற்றுவதற்கு, சட்ட வரன்முறைகளுக்கு உட்பட்டு நியாய பூர்வமாக வழங்கப்பட்ட தீர்ப்பினை மாற்றும் செய்யுமாறு சட்டமா அதிபர் மட்டத்தில் பிரயோகிக்கப்பட்ட அழுத் தம் மற்றும் தொடர்ச்சியான அச்சுறுத் தல்கள் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவி விலகியுள்ளமை இந்த நாட்டின் நீதித்துறைக்கும், ஜன நாயகத்துக்கும் விழுந்திருக்கிற சாட் டையடி மட்டுமல்ல, இதை மிக மோச மான இனவாதச் செயலாகவே கருத வேண்டியுள்ளது. இதற்கு, எனது வன்மை யான கண்டனங்களைத் தெரிவிக் கிறேன்.

நீதித்துறையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் இந்த நாட்டில், இன, மத ஆக்கிரமிப்புகளும், அடக்கு முறைகளும் எத்தனை வீரியமாய் இருக்கும் என்பதுபற்றி, சர்வதேச சமூ கம் இனியேனும் கூருணர்வோடு செய லாற்ற வேண்டும் என்றார். (ம-7)


லக்கி 7 — திகதி 28.09.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0077 — L7 இலக்கம் 1 3 — வெற்றி இலக்கினம்: கடகம் — வெற்றி இலக்கங்கள் 5 9 7 0 6 3

மஹஜன சம்பத — திகதி 2023/09/28 — சீட்டிழுப்பு இலக்கம் 5251 — E 7 9 5 7 8 0 — தேசிய லொத்தர் சபை

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.09.28 — சீட்டிழுப்பு இலக்கம் 560 — விருச்சிகம் 02 30 44 61 விருச்சிகம் — தேசிய லொத்தர் சபை

தன நிதானய — திகதி -2023.09.28 — சீட்டிழுப்பு இலக்கம் - 1281 — T 09 13 20 82 T — Double Chance 06032

மெகா பவர் — திகதி 28/09/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1599 — D 23 03 27 35 70 — 26064

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3493 — சீட்டிழுப்பு திகதி 28.09.2023 — I 06 28 36 72 — I 16835 — தேசிய லொத்தர் சபை

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2225 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2023.09.28 — தினம் வியாழக்கிழமை — வெற்றி இலக்கங்கள் 01 24 31 62 C — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,380,828.40 — 26434 — 292 — DLB

சனிதா — திகதி 2023.09.28 — வெற்றி வாரம் 4386 — வர்ணம் சிவப்பு — 09 25 40 70 Z — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,949,500.00 — 72939 — 367 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3937 — வர்ணம் கபிலம் — சீட்டிழுப்பு திகதி 2023.09.28 — தினம் வியாழக்கிழமை — 09 14 50 62 — சிம்மம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,356,160/- — 86504 — 143 — DLB


கப்ருக — 28.09.2023 — வெற்றி வாரம் 1401 — U 23 10 22 23 39 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 445,561,934.20 — 37015 — 983 — DLB தொலை பேசி: 011-2 332 546-47 Web: www.dlb.lk

சம்வர்தன வாசனாவ — உத்தியோகபூர்வ முடிவுகள் — வெற்றி வாரம் 632 — திகதி 2023-09-28 — வர்ணம் நீலம் — Q — 31 36 63 — 04 — எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,765,784.00 — DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம்: 2051 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 57,864,472/- — 38 42 43 59 N — 60227 — 359 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லை நீதிபதி...


The Secretary,
Judicial Services Commission,
RESIGNATION LETTER
I hereby inform you that I resign my post of District Judge, post of magistrate, post of family court Judge, post of primary court Judge, post of small claims court Judge, post of Juvenile court Judge due to threat of my life and due to lot of stress.
Please accept my resignation.
Thank you.
District Judge & Magistrate
District & Magistrate's Court
Mullaitivu.

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பிலான தீர்ப்பினை அடுத்து எதிர் கொண்டுவந்த உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தான் வகித்து வந்த நீதிபதிப் பொறுப்புக்கள் அனைத்தையும் துறந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். இது குறித்து அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தவை வருமாறு,

குருந்தூர்மலை வழக்கில் நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு தொடர்ச்சியாக அரச தரப்பால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மற்றும் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலும், பாராளுமன்றிற்கு வெளியிலும் எனக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

அண்மையில் எனக்கான (நீதிபதிக்கான) பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்ட அதே வேளை, புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக என்னைக் கண்காணித்துவந்தனர்.

சட்டமா அதிபர், என்னை (முல்லைத்தீவு நீதிபதியை) தனது அலுவலகத்தில் 21.09.2023ம் திகதி அன்று சந்திக்க வருமாறு அழைத்து, குருந்தூர்மலை வழக்கின் நீதிமன்றக் கட்டளைகளை மாற்றியமைக்கும்படி அழுத்தம் பிரயோகித்தார்.

குருந்தூர்மலை வழக்குடன் தொடர்புபடுத்தி எனக்கு (முல்லைத்தீவு நீதிபதிக்கு) எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் (Court of Appeal) எனது தனிப்பட்ட பெயர் குறிப்பிடப்பட்டு இரண்டு வழக்குகள் கோப்பிடப்பட்டுள்ளன.

இவற்றின் அடிப்படையில் எனக்கு நேர்ந்த உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக நான் மிகவும் நேசித்த எனது நீதிபதிப் பதவிகள் அனைத்தையும் துறந்துள்ளேன்.

இது குறித்த பதவி விலகல் கடிதத்தினை கடந்த 23-09-2023 அன்று பதிவுத் தபால் ஊடாக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளேன் என்று தெரிவித்தார்.

அவர், தன்னுடைய பதவி விலகலை அறிவித்த பின்னர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

(ம-7)

# நாட்டை விட்டு வெளியேறும் தொழில் வல்லுநர்கள் தொடர்பில்

## பாராளுமன்றில் விவாதம்

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலைமை தொடர்பான ஒத்திவைப்பு விவாதம் பாராளுமன்றில் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய பாராளுமன்றத்தை எதிர்வரும் அக்டோபர் மாதம் 3 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதிவரை கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

(ம-7)

## ரணில்...

வித்தியாலயத்திற்கு 50 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை பஸ் வழங்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அஸ்வெசும என்ற பெயரில் விஞ்ஞான பூர்வமற்ற,பயனற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு ஏழை மக்களைக் கூட அனாதைகளாக்கியுள்ளனர் என்றும், சிறுநீரக புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர் பிரஜைகளுக்கு நிவாரணம் கூட வழங்க முடியாதுள்ளனர் என்றும், இதற்குக் காரணம் ஆட்சியில் உள்ள ஊழல்தான் என்றும், இவர்களின் மிக மோசமான ஊழல் கொள்கை குறித்து சர்வதேச நாணய நிதியம் கூட கவலை வெளியிட்டுள்ளதாகவும், அரச வருவாய் இலக்குகளை அரசாங்கம் அடையத் தவறியதால், சர்வதேச நாணய நிதியம் கூட தனது இரண்டாம் கட்ட கடன் தொகை வழங்குவதையும் நிறுத்தியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாடு வங்குரோத்தடைந்துள்ள நிலையிலும் நாட்டின் தலைவர்கள் மாதந்தோறும் வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்கின்றனர் என்றும், அண்மைய காலத்தில் ஐக்கிய நாடுகள் சபை, கியூபா, ஜேர்மனி மற்றும் பிற நாடுகளுக்கு இவ்வாறு அவர் சென்றார் என்றும், ஜனாதிபதி ஜேர்மனி சென்ற பிறகு ஐ.எம்.எப் இரண்டாவது கட்ட கடன் வசதியை வழங்குவது தள்ளிப்போகும் என்று கூறும்போதும் நிதியமைச்சராக உள்ள ஜனாதிபதி நாட்டில் இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை கூட்டத்திற்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களில், இரசாயன உரக்கொள்கையைக் கொண்டு வந்து விவசாயிகளையும் விவசாயத்தையும் அழித்தவர்கள்,மொட்டுவின் அமைச்சுப் பதவி இல்லாத எம்.பி.க்கள், தோட்ட மக்களின் வாக்குகளால் வந்து தோட்ட மக்களுக்கு எதுவும் செய்யாத எம்.பி ஒருவரும் அழைத்துச் செல்லப்பட்டார் என்றும், இது அரசியல் இலஞ்சம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த அனைத்து பயணங்களுக்கான அனைத்து செலவுகளையும் நாட்டின் 220 இலட்சம் மக்களின் பணத்திலிருந்தே செலவளிக்கின்றனர் என்றும்,நாட்டை விட்டு வெளியேறிய பிறகு ஏற்படும் அனைத்து செலவுகளும் அரசாங்கத்தால் ஈடு செய்யப்படுகின்றன என்றும்,இந்த தூதுக்குழு விஜயங்களில், துறைசார் நிபுணர்களை அழைத்துச் செல்லாது, அமைச்சர்களை அழைத்துச் சென்று அவர்களை சந்தோசப்படுத்துவதையே தற்போதைய ஜனாதிபதி செய்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்தின் கொள்கை பொருளாதாரத்தை சுருக்குவதே என்றாலும் பொருளாதாரத்தை விரிவாக்குவதே நடக்க வேண்டியது என்றும்.இது மேற்கொள்ளப்படாமையால் தொழிற்சாலைகள் மூடப்பட்டும், சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் வீழ்ச்சியடைந்தும், சுயதொழில் கூட வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்கத்தால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாவிட்டால் தேர்தலை நடத்துமாறும், சகல தேர்தல்களிலும் வெற்றி பெற்று நாட்டை கட்டியெழுப்பும் பொறுப்பை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்றுக் கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார். (ம-7)

VILLAGE HOTEL
JAFFNA EXPRESS
பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
யாழ் - கொழும்பு
2,900/=
வடமராட்சி - கொழும்பு
2,700/=

(17019)
T.P:077 544 8503

SILVER SHIELD
மலிவு விற்பனை
கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை
WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer
ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7317)
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

அலுவலக வேலை - பயிற்சி
2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு
*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

(C-7346)
சம்பளம் - 60,000/- (2 மாதம்)
V2 TRAVELS - 0777-068-777

CANADA
VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7346)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

தேவை
ரேஸ்ரா நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு வியாபாரிகள் தேவை. விசேட விலைக் கழிவுகள் வழங்கப்படும். (17280)
077 978 9223

வீடு வாடகைக்கு தேவை
யாழ் நகரை அண்டிய பிரதேசத்தில் சிறு குடும்பத்திற்கு வீடு/ அனெக்ஸ் மாத வாடகைக்கு தேவை. நல்லூர் விரும்பத்தக்கது.
1. Attached bathroom
2. 02 room with kitchen
(17279)
071 844 8007

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் நாவற்குழியில் 24 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.
- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- தரகர் தேவையில்லை
- நன்னீர் ஊற்று.
தொடர்பு
077 623 4204
076 755 8606
077 076 0389
(17276)

3ஆம் மாத நினைவுகளுடன்



யா/வேலணை மத்திய கல்லூரியின் ஆசிரியர் திரு.க.குகதாசன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர் சுப்பிரமணியம் கனகசபை

உதிரும் கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

(17278)

தோற்றம் 12.08.1938 மறைவு 29.06.2023

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/வேலணை மத்திய கல்லூரி

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org